வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 05

13.01.2024 சனிக்கிழமை

இதழ் : 13

பக்கங்கள் : 12




# ரணிலுடன் இணைய முயற்சி; எந்தவித உண்மையும் இல்லை!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் மறுப்பு

கொழும்பு, ஜனவரி 13

ரணிலையும் சஜித்தையும் இணைக்க வெளிநாட்டு தூதுவர்களின் ஊடாக முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று வெளியாகும் செய்திகளில் எந்த உண்மையும் இல்லை. அதனை முற்றாக நிரா கரிக்கிறேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

11



# பணப்பரிசு விழுந்ததாகக்கூறி 18 இலட்சம் ரூபாய் மோசடி;

## சந்தேகநபர்கள் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 13

குலுக்கல் பரிசு முறையில் பெருந்தொகை பணம் கிடைத்ததாகக் கூறி, அதனைப் பெற்றுக்கொள்ள 18 இலட்சம் ரூபாயை மோசடி செய்த இருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

யாழ்ப்பாணத்தை சேர்ந்த நபர் ஒருவரை தொலைபேசியில் தொடர்புகொண்ட மோசடியாளர் தன்னைத் தனியார் தொலைத்தொடர்பு சேவை வழங்கும் நிறுவனத்தின் பிரதிநிதி என்று கூறியுள்ளார். தொடர்ந்து, தங்கள் நிறுவனம் நடத்திய குலுக்கல் பரிசில் பெருந்தொகை பணம்

11

# 50 ஆயிரம் ஏக்கர் நெல்பயிர் அழிவு

மட்டக்களப்பு, ஜன. 13

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பெரு வெள்ளத்தால் சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நெல்பயிர்கள் தண்ணீரில் மூழ்கி அழிவடைந்தன என்று கமநல அபிவிருத்தி திணைக்கள மட்டக்களப்பு மாவட்ட உதவி ஆணையாளர் எஸ். ஜெகநாதன் தெரிவித்தார்.

இம்முறை மட்டக்களப்பில் சுமார் ஒரு இலட் சத்து 85 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பெரும் போக நெல் பயிர் செய்கை பண்ணப்பட்டது.

இந்த நிலையில், அண்மை நாட்க ளாக பெய்து வரும் கனமழையால் ஏற் பட்ட பெருவெள்ளத்தில் மூழ்கி சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் நெல் பயிர்கள் அழிவடைந்தன.

வெல்லாவெளி, கொக்கட்டிச் சோலை,

11

# மலையகத் தமிழ் மக்கள் தொடர்பில் பிரிட்டனுக்கு பெரும் கடப்பாடு உண்டு!

## இளவரசி ஆனுக்கு மனோ எம். பி. 'ருவிற்'

சென்னை, ஜன. 13

இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான 75 வருட இராஜதந்திர உறவு தொடர்பில் இலங்கை வந்துள்ள பிரித்தானிய இளவரசி ஆனுக்கு - இலங்கை வாழ் மலையக தமிழர் மற்றும் குறிப்பாக, பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் இருக்கின்ற, அவரது பிரித்தானிய முடியரசின் பெரும் கடப்பாட்டை நினைவுறுத்துகிறேன். இதை சொல்ல இதுதான் சிறந்த வேளை என்பதை தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் என்ற முறையில் நான் உணர்கிறேன் - என்று மனோ கணேசன் எம். பி. தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசின் அழைப்பின் பேரில் அயலக தமிழர் நாட்டில் பங்கேற்றுள்ள அவர் தனது எக்ஸ் தளத்தில் இட்ட பதிவில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

இலங்கை - பிரித்தானியா வரலாற்றில் கறுப்பு பக்கம் பெருந்தோட்ட மக்களின் அத்தியாயம் தான். இலங்கையின் ஏனைய மக்களுடன் ஒப்பிடும்போது கல்வி, சுகாதாரம், காணி உரிமை, வீட்டு உரிமை, தொழில் உரிமை ஆகியவற்றில் மிகவும் பின்தங்கிய தரவுகளை கொண்ட தமிழ் பெருந்தோட்ட வதிவாளர்களின் குறை வளர்ச்சி தொடர்பிலான பிரித்தானிய முடியரசின் வரலாற்று கடப்பாட்டை

11

# வலைகளை அறுத்து இந்திய மீனவர் அடாவடி!

வடமராட்சி, ஜன. 13

பருத்தித்துறை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த இந்திய இழுவை படகுகளால் 70 இலட்சம் ரூபாய் பெறுமதியான வலைகள் அறுக்கப்பட்டு நாசமாகின என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு பருத்தித்துறை கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டனர். இதன்போதே பருத்தித்துறை, இன்பருட்டி, சுப்பர்மடம், சக்கோட்டை மீனவர்களின் 70 இலட்சம் ரூபாய் பெறுமதியான வலைகள் அறுத்து அழிக்கப்பட்டன.

நேற்று முன்தினம் நூற்றுக்கும் மேற்பட்ட

11

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு எதிராக ஜே. வி. பி. வழக்கு தாக்கல்!

கொழும்பு, ஜன. 13

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் நாட்டு மக்களின் அடிப்படை பேச்சு உரிமை மற்றும் கருத்து சுதந்திரத்துக்கு எதிரானது. மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்கு இந்த சட்ட மூலத்தை சவாலுக்கு உட்படுத்தி வழக்குத் தாக்கல் செய்துள்ளோம்.

மக்களின் அடிப்படை உரிமையை பாதுகாக்கும் வகையில் உயர்நீதிமன்றம் சிறந்த தீர்மானத்தை எடுக்கும் என்ற நம்பிக்கை உள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை சவாலுக்கு

11

# காரைநகர் இளைஞன் லண்டனில் கொலை!

லண்டன், ஜன. 13

லண்டனில் தமிழர்கள் அதிகம் வாழ்ந்து வரும் ட்விக்கன்ஹாம் பகுதியில் தமிழ் இளைஞன் ஒருவர் கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம், காரைநகரை பூர்வீகமாகக் கொண்ட அஜந்தன் (வயது 21) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார். இவர், முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனின் சகோதரனின் புதல்வராவார்.

இந்த இளைஞர் மீது கடந்த திங்கட்கிழமை இரவு கத்திக் குத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அங்கு பல்கலைக்கழகத்திலிருந்து வீட்டுக்கு ரயிலில் திரும்பிக் கொண்டிருந்த

11

# நாட்டின் பொருளாதார சீர்திருத்தம் ஜனாதிபதிக்கு ஐ. எம். எவ். பாராட்டு

கொழும்பு, ஜன. 13

பொருளாதார சீர்திருத்தங்களை செயல்படுத்துவதில் நாட்டின் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்துக்கு சர்வதேச நாணய நதியம் பாராட்டுத் தெரிவித்துள்ளது. அத்துடன், இலங்கையின் சாதகமான முன்னேற்றங்கள் சர்வதேச உத்தியோகபூர்வ மற்றும்

11



# கந்தகாடு புனர்வாழ்வு இல்ல மோதலில் 25 பேர் காயம்!

## 60 பேர் தப்பியோட்டம்

கொழும்பு, ஜன. 13

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் இரு குழுக்களுக்கிடையில் நேற்று இடம்பெற்ற மோதலில் 25 பேர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவத்தின்போது சுமார் 60 கைதிகள் தப்பி யோடியுள்ளனர்.

தப்பியோடிய கைதிகளை கைது செய்வதற்கு இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து விசேட நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக பொலநறுவை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஷான் டி சில்வா தெரிவித்துள்ளார்.

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

ஓர் ஊரில் பத்து விவசாயிகள் ஒருநாள் தத்தம் நிலங்களில் உழவு வேலை செய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது வானம் இருட்டிக் கொண்டு வந்தது. பயங்கர மின்னலுடன் இடிஇடித்தது.

பயந்து போன அவர்கள் பக்கத்தில் இருந்த ஒரு பாழடைந்த மண்டபத்தில் ஓடி ஒளிந்து கொண்டனர். வெகு நேரமாகியும் மின்னல் வெட்டுவதும் இடி இடிப்பதும் நிற்கவில்லை. அவற்றின் உக்கிரம் வேறு அதிகரித்துக் கொண்டே போனது.

பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்த விவசாயிகளில் ஒருவன் 'நம்மிடையே ஒரு மகாபாவி இருக்கிறான். அவனைக் குறி வைத்துத்தான் கடவுள் இடியையும் மின்னலையும் ஏவியிருக்கிறார். அந்தப் பாவியை வெளியே அனுப்பிவிட்டால் மற்றவர்கள் பிழைத்துக் கொள்ளலாம்' என்று சொன்னான்.

மற்றவர்கள் இதனை ஆமோதித்தார்கள்.

இத்தனை பேரில் அந்தப் பாவியை எப்படி அடையாளம் கண்டு கொள்வது என்று விவாதம் நடந்தது. விவாதத்தின் முடிவில் தீர்ப்பைக் கடவுளிடமே விட்டு விடுவது என்று முடிவாயிற்று. அதன்படி அனைவரும் தத்தம் தொப்பிகளைக் கையில் பிடித்துக் கொண்டு தொப்பியை மழையில் நீட்டுவது என்று முடிவாயிற்று.

அனைவரும் தத்தம் தொப்பிகளை மழையில் நீட்டினர். பயங்கரமான இடி முழக்கத்துடன் ஒரு மின்னல் வெட்டியது. அதில் ஒரு விவசாயியின் தொப்பி மட்டும் எரிந்து சாம்பலாகியது.

மற்ற ஒன்பது விவசாயிகளும் 'இவன்தான் பாவி. இவனை முதலில் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளு' என்று கத்திக் கொண்டே அவன் மேல் பாய்ந்தனர்.

அந்த விவசாயி கெஞ்சிக் கதறி தான் அப்பாவி என்று மன்றாடினான். மற்றவர் யாரும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அவனை பலவந்தமாகக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினர்.

அவன் கதறிக் கொண்டே மழையில் ஓடினான்.

அப்போது அதி உக்கிரமாக ஒரு மின்னல் தாக்கி இடி இடித்தது. ஒடிக்கொண்டிருந்த விவசாயி அதிர்ச்சியில் உறைந்து நின்று விட்டான். சற்று நேரத்தில் நிலைக்குத் திரும்பி மண்டபத்தைப் பார்த்தான்.

மண்டபத்தில் இடி விழுந்து நொறுங்கிக் கிடந்தது. ஒரு புண்ணியவானின் புண்ணிய பலத்தில் தப்பித்திருந்த ஒன்பது விவசாயிகளும் அவனை வெளியே தள்ளிப் பாதுகாப்பை இழந்து பரிதாபமாகக் கருகிச் செத்துப் போய் விட்டனர்.

இந்தக் கதைக்கும் இனி சொல்லப்போகின்ற விசயத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

தமிழரசு கட்சிக்கு தேர்தல் மூலம்தான் தலைவர் தெரிவு நடைபெறும் என்பது உறுதியாகிவிட்டது.

மீண்டும் இந்த ஊர்க்குருவிக்கு வருகின்ற தொலைபேசி அழைப்புகள் எல்லாம் அதுபற்றிய கேள்வியாகவே இருக்கின்றது. யார் வெற்றிபெறுவார் என்பதை அறிந்துகொள்ள பலரும் ஆவலோடு இருப்பது தெரிகின்றது. அவர்கள் எல்லோருடைய விருப்பமும் தமிழரசு தொடர்ந்து தமிழர் அரசியலை தீர்மானிக்கின்ற சக்தியாக இருக்கவேண்டும் என்பதே.

ஆனால், நேற்று அழைத்தவர்களில் ஒருவர் மட்டும் வித்தியாசமாக தனது விருப்பத்தை சொன்னார்.

கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் கூட்டமைப்பின் அனைத்து முடிவுகளும் சம்பந்தன் - சுமந்திரனால் எடுக்கப்பட்டதன் விளைவுகளை, பின்னர் இருபது - இருபதில் நடந்த பாராளுமன்ற தேர்தலில் அவர்கள் அறுவடை செய்திருந்தனர்.

இரண்டாயிரத்து பத்து, பதினைந்து என்று இரண்டு தேர்தல்களிலும் பதினையாயிரம் வாக்குகளுடன் 'சேடம் இழுத்துக்'கொண்டிருந்த ஒரு கட்சி திடீரென்று எழுந்து நிமிர்ந்து வீரநடைபோடத் தொடங்கியது அந்த ஐந்தாண்டு கால கூட்டமைப்பின் செயல்பாடுகளால்தான் என்பதை இந்தப் பத்தியில் பல தடவைகள் குறிப்பிட்டாகிவிட்டது.

நேற்றுப் பேசியவர்களில் ஒருவர், அந்த கட்சியின் தீவிர ஆதரவாளர். 'கண்ணை மூடிக் கொண்டு ஆதரிப்பவன் நான்' என்று சொல்பவர் அவர்.

அவர் 'யார் வெற்றிபெறுவார்' என்று கேட்டார். எனக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. 'அது பற்றி நாம் ஏன் மூக்கை நுழைப்பான். யார் வென்றாலும் அது அவர்கள் கட்சிப் பிரச்னை. அதை ஏன் நமக்கு?' என்றேன். அவர் விடுவதாக இல்லை.

'இல்லை அவர் (பெயர் சொன்னார். அதனை தவிர்க்கிறேன்) வென்றால் எங்களுக்கு நல்லது. அவர்தான் எங்களை இந்த அளவுக்கு வளர்த்துவிட்டவர். அவர் தலைவரானால் அடுத்த தேர்தலில் எங்கள் கட்சி முதலிடத்துக்கு வந்துவிடும். மற்றையவர் வென்றால் தான்தான் பிரபாகரன் என்று சொல்லிக்கொண்டிருப்பார். எங்கள் தலைவர்கள் அரசியல் செய்வது கஷ்டமாகிப் போய்விடும்' என்றார் அவர்.

'ஓமோம் உங்கள் தலைவர் தான் தேசியத் தலைவர் என்று நீங்கள் சொல்லிக்கொண்டிருக்க, அவரும் சொன்னால் உங்களுக்குப் பிரச்னைதானே?' என்றேன்.

இப்போது மேலேயுள்ள கதையில் வருவதுபோல தேர்தலில் தோற்றுப்போகின்றவர் வெளியே போக, மற்றையவர்கள் மின்னலில் காணாமல் போய்விடுவார்கள் என்று நீங்கள் நினைத்தால் அதற்கு நான் பொறுப்பல்ல.

அரசியல்வாதிகள் ஒவ்வொருவரும் தத்தம் பதவிகளை எப்படி தக்கவைக்கலாம் என்று கடுமையாக உழைத்துக் கொண்டிருக்க, நமது மக்களோ எப்படி கனடா போகலாம் என்று மட்டும் யோசித்துக் கொண்டிருக்கின்றனர்.!

- ஊர்க்குருவி.

# 12 இந்திய மீனவர்களும் ஒத்திவைத்த சிறைத் தண்டனையில் விடுவிப்பு!

வடமராட்சி, ஜன. 13

பருத்தித்துறை கடற்பரப்பில் கைதான 12 இந்திய மீனவர்களும் நிபந்தனையின் அடிப்படையில் பருத்தித்துறை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டனர்.

எல்லை தாண்டி வந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் கடந்த ஆண்டு டிசெம்பர் 9 ஆம் திகதி கைதான இந்திய மீனவர்களின் வழக்கு நேற்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கில் படகின் உரிமையாளரை பிரதான சந்தேக நபராக இணைத்துக் கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தை சேர்ந்த அரச சட்டவாளர் நிஷாந் நாகரட்ணம் மன்றில் முன்னிலையாகி திணைக்களத்தின் நிலைப்பாட்டை வெளியிட்டார்.

படகின் உரிமையாளரை பிரதான சந்தேக நபராக சேர்க்க முடியும். 2018 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட புதிய கடற்றொழில், வெளிநாட்டு படகுகளுக்கான சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

இந்த விடயங்களை ஆராய்ந்த பருத்தித்துறை நீதவான், குறித்த விண்ணப்பத்தை நேற்று கட்டளையாக்கி உத்தரவிட்டார்.

இதன் போது படகின் உரிமையாளரை முதலாவது சந்தேக நபராக குறிப்பிடப்பட்டு அவருக்கான அழைப்பாணையை இலங்கை நீதித்துறை ஊடாக அனுப்புவதற்கும் கட்டளை பிறப்பித்து உத்தரவிட்டார் நீதிவான் கிரிசாந்தன் பொன்னுத்துரை.

நீரியல் வளத்துறையால் 12 மீனவர்களுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மூன்று குற்றச்சாட்டுக்களையும் மீனவர்கள் ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் மூன்று குற்றச்சாட்டுக்கும் தலா ஆறு மாத சாதாரண சிறைத் தண்டனை அடிப்படையில் 18 மாத சாதாரண சிறைத் தண்டனை விதித்த பருத்துத்துறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை அதனை பத்து வருடங்களுக்கு ஒத்திவைத்து தீர்ப்பளித்தார். (ஐ)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 2,500 ரூபாய்

கொழும்பு, ஜன. 13

நாட்டின் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 18 ஆயிரத்து 333 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாய் கொடுப்பனவு வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டமானது இந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே தெரிவித்தார்.

க. பொ. த. உயர்தர பரீட்சை

# விவசாய விஞ்ஞான பாடத்தின் 2ஆம் பகுதி வினாத்தாள் இரத்து

கொழும்பு, ஜன. 13

தற்போது நடைபெற்று வரும் கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் விவசாய விஞ்ஞான பாடத்தின் இரண்டாம் பகுதி வினாத்தாள் மூன்று மொழிகளிலும் இரத்து செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் நேற்று அறிவித்தது.

கடந்த புதன்கிழமை விவசாய விஞ்ஞான பாடத்தின் இரண்டாம் பகுதி வினாத்தாள் சமூக ஊடகங்களில் கசிந்ததாக நம்பப்படுவதால் வினாத்தாளை இரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தற்போது நடைபெற்று வரும் பரீட்சைகள் நிறைவடைந்ததன் பின்னர் இரண்டாம் பகுதிக்குரிய புதிய வினாத்தாள் வழங்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். (ஐ)

# நன்றி நவில்கின்றோம்



நாவற்குழி சித்திவிநாயகர் சனசமூக நிலையத்தின் ஆதரவில் சுவிற்சர்லாந்தில் இயங்கிவரும் சிவா கப்பல் பொதிச் சேவையின் உரிமையாளர் **திரு. கார்த்திகேசு சிவகுமாரனின்** அனுசரணையுடன் தான் பிறந்த ஊர் மக்களின் மகிழ்ச்சியை மனதில் கொண்டு 'தேவைக்கான உதவி'. என்ற அடிப்படையில் வருடந்தோறும் நாவற்குழி ஊர் மக்களுக்கு வழங்கப்படும் தைப்பொங்கலுக்கான உதவியானது இம்முறையும் நேற்று (12.01.2024) நாவற்குழி சித்திவிநாயகர் ஆலய முன்றிலில் வைத்து சுமார் 130 குடும்பங்களுக்கு தலா 3,500 ரூபா பெறுமதியான பொங்கல் பொருட்கள் அடங்கிய பொங்கல் பானைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், அந்த ஊர் சிறியவர்கள், பெரியவர்களும் பொங்கல் தினத்தை சந்தோசமாகக் களிக்கவேண்டும் என்ற நோக்கோடு சுமார் 75 குடும்பங்களுக்கு புத்தாடைப் பொதிகளும் அதே குடும்பங்களுக்கு தலா 1000 ரூபா ரொக்கப் பணமும் ஆலய முன்றிலில் வைத்து அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

**நாவற்குழி சித்திவிநாயகர் சனசமூக நிலையம்.**

ஈழநாடு
Eelanadu
13.01.2024 சனிக்கிழமை
சோபகிருது வருடம், மார்கழி 28

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ்நாட்டிடம் எதனை கோரவேண்டும்?

அரசியலில் எதிர்பார்ப்புகளை முன்வைக்கும்போது எப்போதுமே கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொள்வது கட்டாயமானது. ஆனால், நமது தமிழ்த் தேசிய அரசியலில் இதனை அரிதாகவே காணமுடிகின்றது. மீண்டும், மீண்டும் மற்றவர்களிடம் முறைப்பாடுகளை மட்டுமே நமது அரசியல் தலைவர்கள் என்போர் முன்வைக்கின்றனர். தமிழ்நாட்டில் அயலக தமிழ் மகாநாடு நடைபெற்று வருகின்றது. இதற்கு ஈழத் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் அழைக்கப்பட்டிருக்கின்றனர். அங்கு பேசியவர்கள் வழமைபோல் முறைப்பாடுகளை முன்வைத்திருக்கின்றனர் - அதாவது, தமிழ்நாடு, இலங்கை அரசின் எதேச்சாதிகாரத்துக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும் - அதற்கு முடிவுகட்ட வேண்டும் என்றவாறு கோரிக்கை முன்வைத்திருக்கின்றனர்.

தமிழ்நாட்டிடம் முறையிடும் அரசியலுக்கு ஐம்பதாண்டுகளுக்கு மேலான வரலாறுண்டு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் காலத்திலிருந்து தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் ஆதரவுகளை கோரும் படலம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. அன்றைய சூழலில், தமிழ்நாடு சில காத்திரமான தலையீடுகளை செய்தது உண்மைதான். தமிழ்நாட்டை ஓர் அத்திபாரமாகக் கொண்டுதான் அன்றைய இந்தியத் தலையீடும் நிகழ்ந்தது.

இந்திரா காந்தி கூறினார் - ஆறு கோடி தமிழ் மக்களை கொண்டிருக்கும் நாங்கள் எங்களுக்கு அருகில் தமிழ் மக்கள் பாதிக்கப்படும்போது அதனை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இந்திய மத்திய அரசு தமிழ்நாட்டின் குரல்களுக்கு செவி சாய்த்திருந்தாலும்கூட, இலங்கையின் ஆட்சியாளர்களின் அணுகுமுறைகளே இந்தியாவின் இலங்கைக் கொள்கையில் செல்வாக்குச் செலுத்தியது. ஏனெனில், தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் என்னதான் சத்தமிட்டாலும்கூட இந்திய வெளிவிவகாரக் கொள்கையில் மாநில அரசியலின் தலையீடுகள் மிகவும் மட்டுப்பட்டது. இதனை ஈழத் தமிழ் அரசியல்வாதிகள் எந்தளவு புரிந்து கொண்டிருக்கின்றனர் என்பதில் கேள்விகள் உண்டு.

அதேவேளை மற்றவர்களை நோக்கி முறைப்பாடுகளை முன்வைக்கும் ஈழத் தமிழ் அரசியல்வாதிகள் தங்களின் பிரச்னைகளில் தாங்கள் எவ்வாறான அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டும் என்பதில் தெளிவான நிலைப்பாடுகளை முன்வைப்பதில்லை. பொத்தம்பொதுவாக தலையிடுங்கள் என்றவாறே விடயங்களைக் கையாள முற்படுகின்றனர்.

ஈழத் தமிழரின் அரசியல் பிரச்னையை அங்கீகரிக்கும் ஒரேயொரு நாடு இந்தியா மட்டும்தான். ஏனைய நாடுகள் இலங்கை விவகாரத்தை மனித உரிமைகள் மற்றும் நல்லாட்சி என்னும் கண்ணோட்டத்தில்தான் அணுகிவருகின்றது. குறிப்பாக, அமெரிக்கா ஈழத் தமிழர் பிரச்னையை ஒரு மனித உரிமை விவகாரமாக மட்டுமே நோக்குகின்றது. அதுதான் அமெரிக்க வெளிவிவகார கொள்கையின் எல்லை. இந்த நிலையில் இந்தியா ஒன்றுதான் ஈழத் தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் அபிலாசைகள் இருக்கின்றன - அவை அங்கீகரிக்கப்பட வேண்டும் - அது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றது.

இந்திய மத்திய அரசின் அணுகுமுறைக்கு அமைவாகவே தமிழ்நாட்டு அரசியல் தரப்புகளிடமிருந்து குரல்கள் வெளிப்பட வேண்டும். இதனைத்தான் ஈழத்து அரசியல் கட்சிகள் கருத்தொருமித்து கோரிக்கையாக முன்வைக்க வேண்டும். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அமுலபடுத்துவதற்கு தமிழ்நாடு குரல்கொடுக்க வேண்டும் என்பதே ஈழத்து கட்சிகளின் ஒற்றுமையான வெளிப்பாடாக இருக்க வேண்டும். - அவ்வாறில்லாது, வெறும் முறைப்பாடுகளை முன்வைப்பதில் பயனில்லை. இதனைத்தான் கடந்த ஐம்பது ஆண்டுகளாக ஈழத்துத் தமிழ்த் தேசிய கட்சிகள் முன்வைத்து வருகின்றன. ஆனால், ஒரு படி கூடுதலாக முன்னோக்கி நகரமுடியவில்லையே!

# தமக்கு பொருத்தமான இடம் ஒதுக்கி தருமாறு கோரிக்கை!

## திருநெல்வேலி சிறு வியாபாரிகள் விடுத்தனர்



யாழ்ப்பாணம், ஜன. 13

திருநெல்வேலி சந்தையில் சிறு பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் தமக்கு பொருத்தமான - நல்லதோர் இடத்தை ஒதுக்கித் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருநெல்வேலி சந்தையில் நீண்டகாலமாக சிறு பொருட்களை வியாபாரம் செய்து வரும் வியாபாரிகளுக்கு கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர், நல்லூர் பிரதேச சபையால் சந்தைக்குள் வேறு இடம் ஒன்று வியாபார நடவடிக்கைக்காக ஒதுக்கி கொடுக்கப்பட்டுள்ளது.

முன்னர் பிரதான வாயிலுக்கு அருகில் அவர்கள் வியாபாரம் செய்து வந்தனர். அந்த சமயம் சந்தைக்கு வந்து செல்வோர் அவர்களிடம் பொருட்களை வாங்கிச் செல்வது இலகுவாக இருந்தது.

தற்போது, அவர்கள் முன்னர் வியாபாரம் செய்த இடங்கள் வாகன தரிப்பிட பகுதியாகவும், சந்தையில் இருந்து பொருட்களை ஏற்றி இறக்கும் வாகன தரிப்பிடமாகவும் மாற்றப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் வியாபாரம் செய்து வந்தவர்களுக்கு சந்தைக்குள் பிறிதோர் இடத்தை நல்லூர் பிரதேச சபை ஒதுக்கி கொடுத்துள்ளது. புதிதாக ஒதுக்கி கொடுக்கப்பட்ட இடமானது, சந்தையின் ஒதுக்குபுறமான பகுதி அங்கு தமக்கு வியாபாரம் நடைபெறவில்லை.

இட வாடகையாக முன்னர் 80 ரூபாய் வாங்கியவர்கள் தற்போது 150 ரூபாய் வாங்குகின்றார்கள். மின்சார வசதிகள்கூட செய்து தரவில்லை. எமது வியாபார நடவடிக்கைக்காக சந்தைக்குள் நல்லதொரு இடத்தை ஒதுக்கி தருவதற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று கோரினர். (ஐ)

# சிவபூமி நாய்கள் சரணாலயம் தற்காலிகமாக மூடப்பட்டது!

யாழ்ப்பாணம், ஜன. 13

சிவபூமி நாய்கள் சரணாலயம் தற்காலிகமாக மூடப்பட்டது. போதிய மருத்துவ ஆதரவு, பராமரிப்பாளர்கள் இல்லாமையாலேயே சரணாலயம் மூடப்பட்டது.

சிவபூமி நாய்கள் சரணாலயம் கடந்த 4 ஆண்டுகளாக இயக்கச்சியில் செயல்பட்டு வந்தது. அங்கு பல நூற்றுக்கணக்கான கட்டாக்காலி நாய்கள் பராமரிக்கப்பட்டு வந்தன.

எனினும், ஐந்தாவது ஆண்டில் கால்பதிக்கும் இந்த நாய்கள் சரணாலயம் சுகாதார வசதிகள் இன்மை, மருத்துவ துறையின் போதிய ஆதரவின்மை, போதிய பராமரிப்பாளர்கள் இல்லாமையாலும் அறக்கட்டளையினர் நாய்கள் சரணாலயத்தை தற்காலிகமாக முடியுள்ளனர்.

தகுந்த பணியாளர்கள், மருத்துவ ஒத்துழைப்பு கிடைத்ததும் மீண்டும் திறக்கப்படும் அதுவரை நாய்களை அங்கு விடவேண்டாம் என அறக்கட்டளையினர் தெரிவித்துள்ளனர். (ஐ)

# திருநெல்வேலியில் கசிப்பு விற்பனை; பெண் உட்பட ஐந்து பேர் கைதாகினர்!

யாழ்ப்பாணம், ஜன. 13

திருநெல்வேலி சந்தை பகுதிக்கு அண்மையாக கசிப்பு விற்பனை செய்த நபர், அவருக்கு கசிப்பை விநியோகித்து வந்த பெண் உட்பட ஐவர் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.


கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து 19 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் குறித்து மேலும் அறியவருவதாவது,

திருநெல்வேலி சந்தைப் பகுதிக்கு அண்மையாக இடம்பெறும் கசிப்பு விற்பனை குறித்து அறிந்த பொலிஸார் சந்தேகநபரை கைது செய்தனர். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையை அடுத்து அவருக்கு கசிப்பை விநியோகித்த பெண்ணை கோப்பாயில் அவரின் வீட்டில் கைது செய்தனர்.

இதன்போது, 19 லீற்றர் கசிப்பை கைப்பற்றினர். அத்துடன், அந்த வீட்டில் இருந்த நால்வரை கைது செய்தனர். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

உங்கள் செயலில் வேகம் கூடும். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். விருந்தினரின் வருகை உண்டு. சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். புகழ் கௌரவம் கூடும் நாள்.

**இடபம்**

குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். மரியாதை கூடும். மதிப்பு, அந்தஸ்து கூடும் நாள்.

**மிதுனம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகமாகும். திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**கடகம்**

தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். புது சலுகைகள் கிடைக்கும். பெருந்தன்மையுடன் நடந்துக் கொள்ளும் நாள்.

**சிம்மம்**

குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அதிகார பதவிகளில் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். திடீர் யோகம் கிட்டும்.

**கன்னி**

குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். அமைதி நிலவும். கனவு நனவாகும் நாள்.

**துலாம்**

திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். பொறுப்புகள் கூடும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**விருட்சிகம்**

குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். தலைமைக்கு நெருக்கமாவீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**தனுசு**

கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும்.

**மகரம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்ளாதீர்கள். விழிப்புணர்வு தேவைப்படும்.

**கும்பம்**

குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் யாரையும் விமர்சிக்க உத்தியோகத்தில் அலைக்கழிக்கப்படுவீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மீனம்**

குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். பாராட்டப்படுவீர்கள். மனோபலம் அதிகரிக்கும் நாள்

# தமிழர்கள் மகிழ்ச்சியாக இருப்பதே எனக்கு போதும்

## முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு

சென்னை, ஜன. 09

தமிழர்களும், தமிழ்நாடும் மகிழ்ச்சியாக இருப்பதே எனக்கு போதும் என்று கூறியிருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின்.

அயலகத் தமிழர் மாநாட்டில் நேற்று முதலமைச்சர் ஸ்டாலின் பங்கேற்று உரையாற்றினார்.

இதன்போது அவர், எனக்கு உடல்நலம் சரியில்லை என சிலர் கூறும்போது எனக்கு சிரிப்புதான் வந்தது. எனக்கு எப்போதும் மக்களை பற்றிதான் நினைப்பு; என்னை பற்றி நான் நினைத்ததே இல்லை. தமிழர்களும், தமிழ்நாடும் மகிழ்ச்சியாக இருப்பதே எனக்கு போதும். தமிழர்கள் மகிழ்ச்சியாக இருப்பதை பார்க்கும்போது எனக்கு என்ன குறை இருந்துவிடப் போகிறது?. மக்களின் முகத்தில் பார்க்கும் மகிழ்ச்சிதான் எனக்கு உற்சாக மருந்து.

நான் எப்போதும் மக்களுடன் இருப்பவன் என் சக்தியை மீறி உழைக்கிறேன். தாய் மண்ணுக்கு உங்களை வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்ற பொன்மொழியே தமிழர்கள் கடல் கடந்தும் கோலோச்ச உந்துதலாக இருக்கிறது.

தமிழ்நாட்டை வளப்படுத்த நடந்தது முதலீட்டாளர் மாநாடு; உலகமே வளம் பெற நடப்பது அயலகத் தமிழர் மாநாடு. வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் இங்கு முதலீடு செய்ய ஏதுவான சூழல் உருவாக்கப்பட்டு வருகிறது. நாம் அனைவரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். தமிழ் அன்னையின் குழந்தைகள் எங்கு வாழ்ந்தாலும் தாய் தமிழ்நாட்டை மறக்காதீர்கள். அடிக்கடி உங்கள் குழந்தைகளோடு தமிழ்நாட்டுக்கு வாருங்கள் கீழடி, பொருநை, ஆதிச்சநல்லூரை காட்டுங்கள் தமிழோடு இணைந்திருங்கள் நீங்கள் எங்கு வாழ்ந்தாலும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு துணையாக இருங்கள் - என்றார்.

(ஐ)

# உதயநிதியை துணைமுதல்வராக அறிவிக்க ஒத்திகை நடக்கின்றது!

சென்னை, ஜன. 13

“தமிழக முதல்வரை பொறுத்தவரை தெளிவாக இருக்கிறார். சேலம் இளைஞரணி மாநாடு முடிந்த பின்னரோ அல்லது பாராளுமன்றத் தேர்தலுக்கு பின்னரோ, எப்படியாவது உதயநிதி ஸ்டாலினை துணை முதல்வராக்க வேண்டும் என்று. அதற்கான ஒத்திகைதான் தற்போது நடக்கும் நிகழ்ச்சிகள் எல்லாம். உதயநிதி ஸ்டாலினுக்கான ‘பில்டப்’ திருவிழா நடந்து கொண்டிருக்கிறது” என்று பா. ஜ. க. செயல்வீரர்கள் கூட்டத்தில் பேசிய அந்தக் கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை விமர்சித்துள்ளார்.

மேலும், “தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கும் ஒரு 4 விசயங்களைக் கூறினால், அதைக் கேட்டு கிரகித்துக் கொண்டு நடவடிக்கை எடுக்கும் திறமை இருக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? எனவே, குடும்ப ஆட்சி என்பது தமிழகத்தை மொத்தமாக சீரழித்துள்ளது. சிஸ்டம் முழுவதும் கெட்டுப் போய் உள்ளது. மாநிலத்தின் ஆட்சி முதல் மேயர் வரை ஒட்டு மொத்தமாக சிஸ்டத்தைக் கெடுத்து இன்று தமிழகத்தை குட்டிச்சுவராக்கி வைத்துள்ளனர். மழை வந்துவிட்டது. பாதிப்புகளை பார்வையிட யார் செல்ல வேண்டும்? உள்ளாட்சித் துறை அமைச்சர் கே. என். நேருவும், அமைச்சர் துரை முருகனும் செல்ல வேண்டும். ஆனால், அங்கு சென்று யார் பார்த்தது, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.

காரணம், முதல்வரை பொறுத்தவரை தெளிவாக இருக்கிறார். சேலம் இளைஞரணி மாநாடு முடிந்த பின்னரோ அல்லது பாராளுமன்றத் தேர்தலுக்கு பின்னரோ, எப்படியாவது உதயநிதி ஸ்டாலினை துணை முதல்வராக்குவதற்கு. அதற்கான ஒத்திகைதான் தற்போது நடக்கும் நிகழ்ச்சிகள் எல்லாம்.

ஆனால், பா. ஜ. கவை பொறுத்தவரை அவ்வாறு இல்லை. சின்னச் சின்ன பிரச்னைகளின் ஊடே ஜனநாயகத்தை வளர்த்து கட்சியை வளர்ப்பதுதான் பா. ஜ. கவின் அழகே. உலகிலேயே உண்மையான பரிபூரணமான தலையில் தொடங்கி கால் வரை முழுமையாக ஒரு ஜனநாயகம் இருக்கும் கட்சி பா. ஜ. கதான் - என்றார்.

(ஐ)

# 9 தொகுதிகளை தி. மு. கவிடம் பெறுவதற்கு காங்கிரஸ் முடிவு

சென்னை, ஜன. 13

பாராளுமன்ற தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே இருப்பதால் எல்லா கட்சிகளும் கூட்டணிகள் அமைப்பது, தொகுதிகளை தேர்வு செய்வது போன்ற வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டு உள்ளன.

தமிழகத்தில் தி. மு. க. - காங்கிரஸ் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திக்கிறது. இந்தியா கூட்டணியில் இடம் பெற்றுள்ள இந்த கட்சிகள் தொகுதி பங்கீட்டை விரைவில் முடிக்க வேண்டும் என்று இந்தியா கூட்டணி கூட்டத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதையடுத்து அனைத்து மாநில காங்கிரஸ் தலைவர்களையும் அழைத்து அகில இந்திய காங்கிரஸ் தலைவர் கார்கே கருத்து கேட்டார்.

தமிழகத்தின் சார்பில் மாநில தலைவர் கே. எஸ். அழகிரி, பொறுப்பாளர் அஜய்குமார், சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் கு.செல்வபெருந்தகை ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த ஆலோசனையின்போது கடந்த தேர்தலில் ஒதுக்கப்பட்ட தொகுதிகள், வெற்றி பெற்ற தொகுதிகள், இந்த தேர்தலில் கேட்க வேண்டிய தொகுதிகள் எண்ணிக்கை, எந்தெந்த தொகுதிகளை கேட்பது, வெற்றி வாய்ப்புகள் பற்றியும் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

கடந்த முறை திருவள்ளூர், கிருஷ்ணகிரி, ஆரணி, கரூர், திருச்சி, சிவகங்கை, தேனி, விருதுநகர், கன்னியாகுமரி ஆகிய 9 தொகுதிகள் காங்கிரஸுக்கு ஒதுக்கப்பட்டன.

இதில் தேனியை தவிர அனைத்து தொகுதிகளிலும் காங்கிரஸ் வென்றது. எனவே, கடந்த முறை 9 தொகுதிகள் ஒதுக்கப்பட்ட நிலையில் இந்த முறை கூடுதலாக தொகுதிகள் கேட்க வேண்டும். கூட்டணி கட்சிகளுக்காக விட்டுக்கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும் 9 தொகுதிகளில் குறையக் கூடாது என்று தெரிவித்து உள்ளார்கள்.

இதே நேரம் கடந்த முறை காங்கிரஸ் வென்ற சில தொகுதிகளில் போட்டியிட தி. மு. கவும், ஒரு சில கூட்டணி கட்சிகளும் விரும்புகின்றன என்று கூறப்படுகின்றது.

குறிப்பாக கரூர், திருச்சி, விருதுநகர் போன்ற சில தொகுதிகளில் தி.மு.க. போட்டியிடுவதில் உறுதியாக உள்ளதாக கூறப்படுகிறது.

இதனால் காங்கிரஸும் சில தொகுதிகளை விட்டுக்கொடுக்க வேண்டிய நிலை வரலாம் என்று கருதப்படுகிறது. அப்படியானால் மாற்று தொகுதிகளாக எந்த தொகுதியை விட்டுக் கொடுப்பது? அதற்கு பதிலாக எந்த தொகுதியை கேட்பது? என்ற குழப்பம் ஏற்படலாம்.

கடைசி நேரத்தில் சம்பந்தம் இல்லாமல் ஏதாவது தொகுதிகளை வாங்க வேண்டிய சூழ்நிலையை தவிர்ப்பதற்காக காங்கிரஸுக்கு சாதகமான தொகுதிகளை கண்டறிந்து அந்த பட்டியலையும் தருமாறு காங்கிரஸ் மேலிடம் கேட்டு உள்ளது.

இதையடுத்து புதிதாக 9 தொகுதிகள் பட்டியலை காங்கிரஸ் தயாரித்துள்ளது. அந்த பட்டியல் வருமாறு:-

திருநெல்வேலி, தென்காசி, ராமநாதபுரம், தஞ்சாவூர், மயிலாடுதுறை, பெரம்பலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, ஈரோடு. இந்த தொகுதிகள் பட்டியலும் மேலிடத்தில் கொடுக்கப்பட்டுள்ளன என்று தெரிய வருகின்றது.

(ஐ)

# இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகள் மக்களின் உரிமைகளுக்குப் பாதிப்பு!

## மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 13

**பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்காக இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகள் மக்களின் உரிமைகளிற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம்தெரிவித்துள்ளது.**

அரசாங்கத்தின்ஒடுக்குமுறை கொள்கைகளும் பலவீனமான சமூக பாதுகாப்பும் இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் மோசமான விளைவுகளால் பலர் ஆபத்தை ஏற்படுத்தும் நிலையை உருவாக்கியுள்ளது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் தொடர்ந்தும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் ஆகியவற்றை ஒடுக்கிவருகின்றது என தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம், சிறுபான்மை சமூகத்தினருக்கு எதிரான பாரபட்ச கொள்கைகளை அரசாங்கம் தொடர்ந்தும் பின்பற்றுகின்றது எனவும் கூறியுள்ளது.

மில்லியன் கணக்கானவர்கள் பொருளாதார நெருக்கடியிலிருந்து தப்புவதற்காக போராடுகின்றனர் என தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசியாவிற்கான பிரதி இயக்குநர் மீனாக்சி கங்குலி, இதற்கு ஊழலும் பொறுப்புக் கூறாத ஆட்சியும் காரணம் என தெரிவித்துள்ளார்.

வறிய நிலையில் உள்ளவர்கள் மீது கடும் தாக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மூலம் தற்போதைய அரசாங்கம் பதில் நடவடிக்கைகளை எடுக்கின்றது என குறிப்பிட்டுள்ள அவர், அதே வேளை பொறுப்புக்கூறல் ஜனநாயக அடிப்படையிலான தீர்மானங்களை எடுப்பதற்கு அவசியமான குரல்களை தற்போதைய அரசாங்கம் ஒடுக்குகின்றது எனவும் கூறியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தினதும் சர்வதேச நாணயநிதியத்தினதும் பொருளாதார நெருக்கடிக்கான பதில் நடவடிக்கைகள் மனித உரிமைகளிற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

17 வீதமான மக்கள் ஒரளவு அல்லது கடும் உணவுப்பாதுகாப்பின்மையை எதிர்நோக்கும் நிலை இலங்கையில் காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

(அ)

# நயன வாசலதிலக பதவிப்பிரமாணம்!



கொழும்பு, ஜன. 13

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினராக நயன வாசலதிலக நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்றம் கூடியதுபோது பாராளுமன்ற உறுப்பினராக நயன வாசலதிலக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து சமிந்த விஜேசிறி விலகியிருந்தார்.

இதனை அடுத்து ஏற்பட்ட பாராளுமன்ற வெற்றிடத்துக்கு நயன வாசலதிலகவை நியமனம் செய்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன் தினம் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# லொறியில் ஏற்றிச்செல்லப்பட்ட மரப்பலகை வீழ்ந்து பெண் பலி!

கொழும்பு, ஜன. 13

அம்பகஸ்தோவை பிரதேசத்தில் லொறி ஒன்றில் ஏற்றிச் சென்ற மரப்பலகைகள் வீழ்ந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் வெலிமடை பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய பெண்ணாவார்.

மரப்பலகைகளை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று பள்ளத்தில் வீழ்ந்துள்ளது. லொறியை மீண்டும் வீதிக்கு எடுப்பதற்காக லொறியில் உள்ள மரப்பலகைகளை அகற்ற முற்பட்டபோது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார். (அ)

# வவுனியா புளியங்குளத்தில் கஞ்சாவுடன் ஒருவர் கைது!

வவுனியா, ஜன. 13

வவுனியா புளியங்குளத்தில் ஒரு கிலோ 350 கிராம் கஞ்சாவுடன் ஒருவரை கைது செய்துள்ளதாக புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

புளியங்குளம் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை புளியங்குளம் பகுதியில் விசேட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது புதுக்குடியிருப்பில் இருந்து பொல்கஹவலைக்கு செல்லும் மோட்டார் சைக்கிள் ஒன்றினை சோதனை செய்தபோது ஒரு கிலோ 350 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தமை மற்றும் எடுத்துச்சென்ற பொல்கஹவலையை சேர்ந்த 46 வயதுடைய ஒருவரை கைது செய்ததுடன், கடத்தலுக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டு புளியங்குளம் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

(அ)

# முதல் காலாண்டுக்குள் வெளிநாட்டு கடன்களை சீரமைக்க எதிர்பார்ப்பு!

## நிதி இராஜாங்க அமைச்சர் கூறுகிறார்



கொழும்பு, ஜன. 13

வெளிநாட்டு கடன்களை முதல் காலாண்டுக்குள் மறுசீரமைத்து இரு தரப்பு ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட எதிர்பார்த்துள்ளோம். வரி வலையமைப்பை விரிவுப்படுத்துவதற்காகவே 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் வரி கோப்பு ஆரம்பிக்க வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாழ்க்கை செலவு அதிகரிப்பு மற்றும் மந்த போசணை பாதிப்பு தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார மீட்சிக்காக தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் நடுத்தர மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கிறோம். கடுமையான தீர்மானங்கள் தற்காலிகமானதே நிலையான தீர்வை நிச்சயம் பெற்றுக்கொடுக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

தேசிய மற்றும் பொருளாதார காரணிகளினால் கடந்த ஆறு காலாண்டுகளாக பொருளாதாரம் ஒடுக்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டு இறுதி காலாண்டில் பொருளாதார வளர்ச்சி சாதகமான நிலையில் முன்னேற்றமடைந்தது. 2024 ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சியை இரண்டு சதவீதத்தால் மேம்படுத்த எதிர்பார்த்துள்ளோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளை கடுமையான சூழலுக்கு மத்தியில் செயற்படுத்தியுள்ளோம். அந்த தீர்மானங்களினால் நாடு தற்போது இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. பரிந்துரைத் திட்டங்களை எதிர்வரும் 2027 ஆம் ஆண்டு வரை செயற்படுத்த வேண்டும். குறுகிய அரசியல் நோக்கத்துக்காக தற்போதைய மறுசீரமைப்புக்களை இடைநிறுத்தினால் நாடு மீண்டும் வங்குரோத்து நிலையடையும். இதனை எவராலும் தடுக்க முடியாது.

மறுசீரமைக்க முடியாத அளவுக்கு நாட்டின் அரசமுறை கடன் காணப்படுகிறது. இலங்கையின் கடன்களை நிலைபேறான தன்மைக்கு உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் பிரதான இலக்காக காணப்படுகிறது. வெளிநாட்டு கடன்களை மறுசீரமைப்பதற்கு இருதரப்பு மற்றும் பல்தரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளோம். வெளிநாட்டு கடன்களை முதல் காலாண்டுக்குள் கைச்சாத்திட எதிர்பார்த்துள்ளோம்-என்றார்.

# அடக்கியொடுக்க முயலும் அரசின் போக்குகள் உலகுக்கு வெட்டவெளிச்சமாக்கப்படவேண்டும்

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம், ஜன. 13

கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கிற்கான பயணத்தின் போது அறவழியில் போராடிய வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி ஜெனிற்றா கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமையை மாணவ சமுதாயமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டிப்பதோடு, அப்பட்டமான ஜனநாயக உரிமை மீறலாகவும் இதனைப் பதிவு செய்கின்றது என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அனைத்துலகச் சமூகத்தின் முன்னால் ஜனநாயக உரிமைகள் வழங்கப்படுவதாக ஒரு போர்வையைப் போர்த்திக் கொண்டு, அறவழியில் போராடிய மக்களின் உரிமையினை கிஞ்சித்தும் பொருட்படுத்தாது கைதுகள், விசாரணைகள் மூலமாக அடக்கியொடுக்குவதற்கு முயலும் இந்த இலங்கை அரசின் போக்குகள் உலக அரங்கின் முன்னால் வெட்ட வெளிச்சமாக்கப்பட வேண்டியவையாகும்.

இலங்கை அரச படைகளினால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நியாயமானதும் நீதியானதுமான பதிலொன்றைக் கூறுவதற்கு இயலாத அரசு, அவற்றுக்கான பதில் கோரிப் போராடும் உறவுகளை இன்று வரையில் வீதியில் விட்டுள்ளதோடு, அவர்களுக்கான பரிகார நீதியையும் மறுத்து வருகின்றது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் தங்கள் உறவுகளுக்கு நேர்ந்த கதிக்கு பதில் கோரி அறவழியில்ப் போராடும் உறவுகளின் உரிமையினையும் கருத்துரிமையினையும் அடக்கியொடுக்கும் செயற்பாடாகவே வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி ஜெனிற்றாவின் கைது நோக்கப்பட வேண்டியுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக குரல் கொடுத்துவரும் இன்னபிற செயற்பாட்டாளர்கள், உறவினர்களை புலனாய்வுப்பிரிவினர் உள்ளிட்ட அரச படைகள் அச்சுறுத்தும் போக்கும் ஆங்காங்கே இடம்பெற்று வருகின்றது என்பது யாவரும் அறிந்ததே! இதுபோன்ற அப்பட்டமான ஜனநாயக மீறல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் சிறிலங்கா அரசு உதட்டளவில் நல்லிணக்கம் பேசும் செயல்களில் ஈடுபடாமல், உளச்சுத்தியுடன் நிலையான நல்லிணக்கத்தினை எட்டுவதற்கு முயல வேண்டும்.

தமிழ் மக்களை ஒரவஞ்சனையுடன் வஞ்சித்து விட்டு நல்லிணக்கம் பற்றிய உரையாடல்களை மேற்கொள்வதென்பது 21 ஆம் நூற்றாண்டில் நவீன வடிவில் அடிமைத்தனத்தை தமிழ் மக்கள் மீது திணிக்க முயல்வதாகும்-என்றுள்ளது.

(அ)

# கெஹலியவை பாதுகாத்த சகலரும் தேசத்துரோகிகள்

**சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு**

**கொழும்பு, ஜன. 13**
**மருந்து கொள்வனவு திருட்டில் ஈடுபட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலியவையும் இந்தக் குழுவையும் பாதுகாக்க 113 பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கைகளைத் தூக்கினர். இந்த 113 பேரும் நாட்டுத் துரோகிகள், தேசத் துரோகிகள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் மந்தபோசணையை இல்லாது செய்வது தொடர்பில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை வழிமொழிந்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தின் புள்ளிவிபர தகவல்களின் பிரகாரம், நாட்டில் 60 வீத குடும்பங்களின் வருமானம் குறைந்துள்ளதுடன், 91வீத செலவினங்கள் அதிகரித்துள்ளன.

பொருளாதார வங்குரோத்து நிலையால் 22 வீத குடும்பங்கள் கடனால் பாதிக்கப்படும் போது, 3 முதல் 21 வயது வரையிலான பாடசாலை செல்லும் வயதினரில் 54.9 வீதமானவர்கள் பொருளாதார வங்குரோத்து நிலையால் பெரும் பாதிப்புகளைச் சந்தித்துள்ளனர்.

7 வீதமான மக்கள் தமது சுகாதார தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் வழமைக்கு மாறான போக்கை கையாண்டு வரும் நிலையில்,நாட்டில் பரிதாபகரமான மற்றும் அவலகரமான நிலைமைகள் உருவெடுத்துள்ளன.

இந்நிலையில் நாட்டை வங்குரோத்தடையச் செய்த குழுவினரால் நாட்டை சரியான முறையில் கட்டியெழுப்ப முடியுமா இல்லையா என்பது துறைமுக அதிகார சபையின் கப்பல்களை பயன்படுத்திக் கொண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கடல் நடுவில் நடத்திய விருந்து கொண்டாட்டத்திலிருந்து புலப்படுகிறது. நாட்டு மக்கள் நிம்மதி இழந்து இருக்கும் இவ்வேளையில் நாட்டு மக்களின் வரிப்பணத்தைப் பயன்படுத்தி கடலில் மதுபான விருந்து கொண்டாட்டங்களை நடத்தும் கேவலமான அரச ஆட்சியே நாட்டில் இருக்கிறது.

அத்துடன் தரமற்ற ஹியுமன் இம்யூனிகுளோபியுயின் மருந்து கொள்முதல் ஊழல் உட்பட இந்நாட்டிலிருந்து மருந்துகளைத் திருடிய அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணையை முன்னெடுத்துச் சென்றாலும், இந்தத் திருட்டில் ஈடுபட்ட முன்னாள் சுகாதார அமைச்சரையும் இந்தக் குழுவையும் பாதுகாக்க 113 பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கைகளை தூக்கினர்.இந்த 113 பேரும் நாட்டுத் துரோகிகள்,மக்கள் துரோகிகள்.இந்த 113 பேரும் திருட்டுக்கு மோசடிக்கு ஆதரவாக முன் நிற்கிறார்கள்.

2020 இல் சர்வதேச நாணய நிதியம் வழங்கிய 100 மில்லியன் டொலர்களை பெற்றுக் கொள்ள கோட்டாபய அரசாங்கம் மறுத்தபோது வாயை மூடிக் கொண்டு இருந்த அமைச்சர் பந்துல குணவர்தன, தற்போது சர்வதேச நாணய நிதியம் கூறுவதற்கு இணங்க அவ்வாறே முன் செல்வோம் என கூறுவது ஆடை அணிந்து கொண்டா என கேட்கிறோம்-என்றார். (அ)

# வர்த்தகத்தை விரிவுபடுத்தும் நோக்கில் மேலும் 7.9 மில்லியன் அமெ. டொலர்கள்!

கொழும்பு, ஜன. 13

இலங்கையில் வர்த்தகத்தை விரிவுபடுத்தும் நோக்கில், அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக குழுமத்தினால் 7.9 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை முதலீட்டுச் சபையின் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பண்ட வசதிகள் மற்றும் ஏனைய வர்த்தக செயற்பாடுகளை மேலும் மேம்படுத்துவதற்கு இந்த முதலீடு வழங்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகமானது தற்போது டிரான்ஷிப்மென்ட் துறைமுகமாக மாறி வருவதாகவும் இலங்கை முதலீட்டுச் சபையின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# சீரற்ற காலநிலை காரணமாக நாட்டில் 178,312 பேர் பாதிப்பு!

கொழும்பு, ஜன. 13

நாடளாவிய ரீதியில் சீரற்ற காலநிலை காரணமாக 178,312 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

53,641 குடும்பங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சீரற்ற காலநிலையினால் கிழக்கு மாகாணமே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் 52,652 குடும்பங்களை சேர்ந்த 174,866 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சீரற்ற காலநிலை காரணமாக கங்கைகளின் நீர் மட்டமும் அதிகரித்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், மல்வத்து ஓயா மற்றும் யான் ஓயாவின் நீர்மட்டம் தற்போது அதிகரித்து வருவதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த நீர்நிலைகளை அண்மித்த தாழ்நிலப்பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டிருந்த பொலனறுவை - மட்டக்களப்பு பிரதான வீதியின் போக்குவரத்து மீண்டும் வழமைக்கு திரும்பியுள்ளது.

அனர்த்த முகாமைத்து நிலையம் அறிக்கையொன்றை விடுத்து, இதனைத் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால், பொலன்னறுவை - மட்டக்களப்பு பிரதான வீதியூடான போக்குவரத்து கல்லெல்ல பகுதியில் தடைப்பட்டிருந்தது.

இதேவேளை, மண்சரிவு காரணமாக பதுளை-கொழும்பு பிரதான வீதியின் போக்குவரத்து ஹாலிஎல-உடுவரை பகுதியில் தொடர்ந்தும் தடைப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (அ)

# கப்பல்களில் விருந்துக்கு மக்களின் பணம் பயன்படுத்தப்படவில்லை!

*சபையில் கூறினார் பிரேமலால் ஜயசேகர*

கொழும்பு, ஜன. 13

துறைமுக அதிகார சபையின் இரண்டு கப்பல்களில் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்ட விருந்துக்கு பொதுமக்களின் பணம் பயன்படுத்தப்படவில்லை என பொறுப்புடன் கூறுவதாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பணம் பெறப்பட்ட விதம் மற்றும் அதற்கான அனைத்துப் பற்றுச்சீட்டுகளும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் வெளியாகும் செய்திகள் பொய்யானவை எனவும் அவ்வாறான அறிக்கையை வெளியிட்ட துறைமுக தொழிற்சங்க உறுப்பினர்களுக்கு எதிராக உடனடியாக சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் எனவும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வெள்ளிக்கிழமை எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# தைப்பொங்கல் தினத்தில் கைதிகளை பார்க்க வசதி!

கொழும்பு, ஜன. 13

தைப்பொங்கல் பண்டிகையையொட்டி, எதிர்வரும் 15ஆம் திகதி, இந்து மதத்தைப் பின்பற்றும் கைதிகளைப் பார்வையிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்தத் தினத்தில் இந்து மதக் கைதிகளுக்கு தற்போதுள்ள விதிமுறைகள் மற்றும் முறையான சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளின் கீழ் ஒருவருக்கு ஏற்றளவு உணவுப் பொதிகள் மற்றும் இனிப்புகளை அவர்களின் உறவினர்கள் வழங்க அனுமதிக்கப்படுவர் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# கொழும்பில் இன்று 16 மணிநேர நீர்வெட்டு

கொழும்பு, ஜன. 13

கொழும்பில் இன்று 16 மணித்தியால நீர் வெட்டு அமுல்படுத்தப்படும் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

இதன்படி, கொழும்பு 11, 12, 13, 14 மற்றும் 15 ஆகிய பகுதிகளுக்கு நீர் விநியோகம் நிறுத்தப்படவுள்ளது.

குறித்த பகுதிகளில் இன்று மாலை 05.00 மணி முதல் நாளை காலை 09.00 மணி வரை இந்த நீர் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

அம்பத்தலே நீர் விநியோகத்தின் ஆற்றல் பாதுகாப்புத் திட்டத்தினால் முன்னெடுக்கப்பட்ட அத்தியாவசிய முன்னேற்றப் பணியின் காரணமாக குறித்த நீர் வெட்டு அமுல்படுத்தப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால், மேற்குறித்த பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் முன்கூட்டியே நீரை சேகரிக்கும்படி தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# ரயில் சேவைகள் வழமைக்கு!

கொழும்பு, ஜன. 13

வெள்ளம் காரணமாக இடைநிறுத்தப்பட்ட மட்டக்களப்பு ரயில் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மீனகயா இரவு நேர அஞ்சல் ரயில் மற்றும் நேற்று காலை சேவையில் ஈடுபடவிருந்த உதயதேவி கடுகதி ரயில் என்பவற்றின் சேவைகள் நேற்று முன்தினம் முதல் இரத்துச் செய்யப்பட்டன.

மட்டக்களப்பு - திருகோணமலை ரயில் மார்க்கத்தில் புனானை மற்றும் வாழைச்சேனை ரயில் நிலையங்களுக்கு இடையிலான பகுதி வெள்ளத்தில் மூழ்கியதால் ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டன.

இந்தநிலையில், குறித்த பகுதியில் வெள்ள நீர் குறைவடைந்துமையினால் ரயில் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# ரணிலின் வெளிநாட்டு பயணங்களுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் அதிக பணம்!

## அனுரகுமார திஸாநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 13

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டுப் பயணங்களுக்காக வரவு - செலவுத் திட்டத்தில் அதிகளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தி கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.**



நாடு அதல பாதாளத்தில் இருக்கும் வேளையில் ஜனாதிபதி வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்வதாகவும் உலகில் எந்தவொரு ஜனாதிபதியும் இவ்வாறான வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்வதில்லை எனவும் அவர் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரிசி, எரிபொருள், அத்தியாவசிய பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், பால் மா என மக்கள் அன்றாட நுகரும் பொருட்கள் மீது வற் வரியை விதித்து சேகரிக்கப்படும் நிதியில் ஜனாதிபதி வெளிநாடுகளுக்கு சுற்றுலா செல்கிறார்.

வெளிநாடுகளில் எவரும் இறந்துபோனால் அங்கு செல்கிறார். அல்லது ஏதாவது விழாக்களுக்குச் செல்கிறார். அல்லது எந்தவொரு உலகத் தலைவர்களும் பங்கேற்காத நிகழ்வுகளில் சென்று உரையாற்றுகிறார். இதனால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பயன் என்ன?.

ராஜபக்ஷ குடும்பத்தினர் அனைவரும் அரசாங்க வீடுகளில் இருக்கின்றனர். அவர்கள் எந்த வேலையும் செய்யாமல் இருப்பது வெட்கக்கேடானது. மகன் அரசு வீட்டில், அப்பா அரசு வீட்டில், மாமா அரசு வீட்டில், சின்ன மாமா அரசு வீட்டில், கொள்ளு தாத்தா அரசு வீட்டில். இது வெட்கக்கேடான விடயம் இல்லையா.

துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான கப்பல்கள் அரச நிதியை செலவழித்து நடு இரவில் கடலில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதாக கூறுகின்றனர். இவர்கள் நடு இரவில் என்ன செய்வார்கள் என எமக்குத் தெரியாதா?. 20 மீற்றருக்கு அப்பால் கண் தெரியாதவர்கள்தான் கடலில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

இந்த செலவுகள் அனைத்தும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்-என்றார்.

(அ)



# சமத்துவ கட்சி தலைவரை சந்தித்தார் கனடா தூதுவர்!

கிளிநொச்சி, ஜன. 13

கிளிநொச்சிக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த இலங்கைக்கான கனடா தூதுவர் எரிக் வோல்ஸ் மற்றும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு. சந்திரகுமாருக்கும் இடையில் கிளிநொச்சியில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

சமத்துவக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் காலை 10 மணிக்கு இடம்பெற்ற இச்சந்திப்பில் யுத்தத்திற்கு பின்னராக காலப்பகுதியில் இனங்களுக்கிடையில் கட்டியெழுப்படவேண்டிய நல்லிணக்கம் பற்றியும், முன்னாள் பேராளிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள் வாழ்வை மீள கட்டியெழுப்ப வேண்டிய அவசியம் பற்றியும் வலியுறுத்தினோம்.

குறிப்பாக இங்கு போதுமான தொழில் வாய்ப்புக்கள் இல்லாமையால் ஏராளமான இளைஞர், யுவதிகள் கனடா உள்ளிட்ட பல நாடுகளுக்கு புலம் பெயர்ந்து கொண்டிருக்கின்றார்கள். எனவே அவர்கள் இங்கு தொழில்களை பெற்று வாழ்வதற்குரிய முதலீடுகளை மேற் கொண்டு தொழில் துறைகளை ஆரம்பிக்க கனடா முன்வர வேண்டும் என்றும் தெரிவித்திருந்தோம் என்றார் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார்.

(அ)

# இளம் தாயை பெற்றோல் ஊற்றி கொளுத்திய சந்தேக நபர் கைது!

கொழும்பு, ஜன. 13

கொழும்பு, ஆட்டுபட்டித் தெருவில் பெண்ணொருவரை பெற்றோல் ஊற்றி கொளுத்திய சந்தேகநபர் ஆட்டுப்பட்டித் தெரு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி முற்பகலே இக்கொடூரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எரி காயங்களுக்கு உள்ளான 27 வயது பெண் கொழும்பு வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

பாதிக்கப்பட்ட பெண் திருமணமாகி விவாகரத்து பெற்றவர் என்பதோடு இரு பிள்ளைகளின் தாயாவார். இப்பெண் குறித்த நபருடன் தொடர்பை பேணி வந்துள்ளார் என தெரிய வருகின்றது.

சந்தேக நபர் குறித்த பெண்ணை ஓட்டோவில் வைத்து அவர் மேல் பெற்றோல் ஊற்றி தீ வைத்த நிலையில் பாதிக்கப்பட்ட பெண் அலறிக்கொண்டு வீதிக்கு வந்து வீழ்ந்துள்ளார்.

பின்னர் பிரதேசவாசிகள் பாதிக்கப்பட்ட பெண்ணை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றுள்ளனர்.

சந்தேக நபர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்பதோடு அவர் பாதிக்கப்பட்ட பெண்ணிடம் பணம் கேட்டும் அதை அவர் கொடுக்காததால் இந்த சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனவும் பாதிக்கப்பட்டவரது பெற்றோர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

(அ)

# ‘ரின்’ இலக்கத்தைப் பெறும் செயல்பாடு தொழில்நுட்பக்கோளாறால் ஒத்திவைப்பு

## ஏப்ரல் வரை கால அவகாசம்

கொழும்பு, ஜன. 13

சில நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் தொழிநுட்பச் சிக்கல்கள் காரணமாக அரச நிறுவனங்களில் வரி இலக்கம் (ரின்) திறக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை தற்காலிகமாக ஒத்திவைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அடுத்த மாதம் முதல் நடப்பு கணக்கு தொடங்கும் போதும், வாகனங்களை பதிவு செய்யும் போதும், புதுப்பிக்கும்போதும் வரி இலக்கம் கட்டாயமாக்கப்படும் என்ற தீர்மானம் ஏப்ரல் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப வசதிகள் போதிய அளவு இல்லாததால் இதற்கான கால அவகாசம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆண்டுக்கு 12 இலட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் பெறும் 18 வயதுக்கு மேற்பட்ட நபர்கள் மட்டுமே வரி செலுத்தத் தகுதியுடையவர்கள். இதனால், 18 வயது பூர்த்தியடைந்த அனைவரும் வரி இலக்கத்தை பெற வேண்டும். ஆனால் அவை



அனைத்தும் வரிப் பொறுப்புக்கு உட்பட்டவை என்று அர்த்தமல்ல.

ஏப்ரல் மாதம் முதல் நடப்புக் கணக்கு தொடங்கும் போதும், கட்டிடத் திட்டங்களுக்கு அனுமதி கோரும் போதும், வாகனப் பதிவு, உரிமம் புதுப்பித்தல், நில உரிமைப் பதிவு போன்றவற்றிலும் வரி இலக்கம் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்-என்றார்.

(அ)

# இலத்திரனியல் அட்டை, கியூ.ஆர். மூலம் அரச பஸ்களில் கட்டணங்கள் அறவீடு!

கொழும்பு, ஜன. 13

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான அரச பஸ்களில் இலத்திரனியல் அட்டை அல்லது கியூ.ஆர் குறியீடு மூலமாக கட்டணம் அறவிடும் முறைமையினை அறிமுகப்படுத்துவதற்கு போக்குவரத்து அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இந்த தகவலை போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை போக்குவரத்துச் சபை புதிய இணையத்தளம் மூலம் பணம் செலுத்தும் முறையை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சில பஸ் சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் ஒரு நாளைக்குரிய மொத்த வருமானத்தை உரிய வகையில் குறித்த டிப்போக்களிடம் கையளிப்பதில்லை. இதனால் நாளொன்றுக்கு சுமார் 10 மில்லியன் ரூபா நஷ்டத்தை இலங்கை போக்குவரத்து சபை சந்திக்கிறது.

ஆகவே, இலத்திரனியல் அட்டை அல்லது கியூஆர் குறியீட்டு முறைமையுடன் கூடிய பணம் செலுத்தும் முறை சுமார் இரண்டு மாதங்களில் அறிமுகப்படுத்தப்படும்.

இந்த முயற்சியானது 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கை போக்குவரத்து சபைக்காக அறிவிக்கப்பட்ட அரசாங்கத்தின் டிஜிற்றல் மயமாக்கல் முயற்சியின் ஒரு பகுதியாகும், இது 2024 இல் நடைமுறைப்படுத்தப்படும்-என்றார்.

(அ)

# ரணிலுடன் தொடர்பிலுள்ளோர் ஐக்கிய மக்கள் சக்தியினர்தான்!

கொழும்பு, ஜன. 13

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடைத்த தொலைபேசி அழைப்புகளை ஆராய்ந்தால், அவற்றில் பெரும்பான்மையானவை ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியல்வாதிகளுடையவை என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் ஜனாதிபதியை விமர்சிப்பவர்கள் உண்மையில் அவருடன் தொலைபேசியில் நீண்ட மற்றும் சுமூகமான உரையாடல்களில் ஈடுபடுவதாக அவர் கூறினார்.

“ஜனாதிபதி செயலகத்திற்குச் செல்லும்போது உண்மையில் எங்களுக்கு இடமில்லை. ஜனாதிபதியின் அலுவலகம் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களால் நிரம்பியுள்ளது. எதிர்வரும் வாரங்களில் எத்தனை ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் ஜனாதிபதியுடன் நிற்பார்கள் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் பார்த்துக் கொள்ளலாம்” என்று மஹிந்தானந்த கூறினார்.

(அ)

ஈழநாடு



# நள்ளிரவு காரைதீவுக்குள் புகுந்தது பெருவெள்ளம்!

**மக்கள் அல்லோல கல்லோலம்**

காரைதீவு, ஜன. 13

**இங்கினியாகல சேனநாயக்கா சமுத்திரத்தின் அனைத்து வான் கதவுகளும் திறக்கப்பட்டதால் நேற்று முன் தினம் நள்ளிரவில் திடீரென வெள்ளநீர் காரைதீவுக்குள் புகுந்தது.**

மக்கள் பதறிஅலறி அடித்துக் கொண்டு ஓடினார்கள். நிலைமை அல்லோல கல்லோலமானது. மக்கள் பீதியுடன் இடம் பெயர்ந்தனர்.

நேற்று வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணி அளவில் இந்த வெள்ள நீர் பிரதான வீதியை தாண்டி ஊருக்குள் பாய்ந்தது.

சுமார் 300 மீற்றர் தூரம் குளத்து நீர் நள்ளிரவில் வந்ததனால் மக்கள் பீதி அடைந்தார்கள்.

இங்கினியாகல குளம் உடைந்துவிட்டதோ என்ற நினைப்பில் மக்கள் பீதியுடன் அலறி அடித்துக் கொண்டு ஓடினார்கள்.



மக்களின் வீடு வாசல் எல்லாம் வெள்ள நீர் தேங்கி காணப்படுகிறது. (அ)

# வெள்ளத்தின் எதிரொலியாக மரக்கறிகள் விலை உச்சத்தில்!

காரைதீவு, ஜன. 13

சமகால கனமழை மற்றும் வெள்ள நிலைமை காரணமாக மரக்கறிகளின் விலை உச்சத்தை அடைந்திருக்கிறது.

குறிப்பாக கரட், பீட்ரூட் போன்ற மலைநாட்டு மரக்கறிகளினா விலை கிலோ ஒன்று 1100 வரை உயர்ந்துள்ளது.

அதேவேளை பச்சை மிளகாயின் விலை 1700 வரை உயர்ந்திருக்கிறது.

கோவா, பீன்ஸ் போன்ற மரக்கறிகளின் விலையும் ரூ. 600 ரூபாய் முதல் 700 வரை உயர்ந்திருக்கிறது.

கத்திரிக்காயின் விலை 800 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 7 நலன்புரி முகாம்!

மட்டக்களப்பு, ஜன. 13

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரின் பணிப்புரைக்கு அமைய வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக மாவட்டத்தில் 07 நலன்புரி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அங்கு தங்கியுள்ள மக்களுக்கு பிரதேச செயலகங்கள் மற்றும் அனர்த்த நிவாரண மற்றும் அனர்த முகாமைத்துவ பிரிவினால் சமைத்த உணவு மூன்று வேளையும் வழங்கப்படுகின்றது.

மாவட்டத்தில் போக்குவரத்து பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு படகு மற்றும் உழவு இயந்திர சேவைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

வெள்ளநீர் தடைப்பட்டுள்ள பகுதிகளில் இருந்து வெள்ள நீரை வெளியேற்றும் நடவடிக்கைகளும் துரித கதியில் முன்னெடுக்கப்படுகிறது. (அ)

*வெள்ளத்தில் மூழ்கியது அம்பாறை;*

# மக்களின் தேவைகளை ஆராய களத்தில் இறங்கிய ஹரீஸ் எம்.பி.



அம்பாறை, ஜன. 13

நாட்டின் சீரற்ற காலநிலை காரணமாக அம்பாறை மாவட்டம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. வெள்ள நீரை கட்டுப்படுத்த அணைக்கட்டுகள் திறந்துவிடப்பட்டுள்ளதால் அம்பாறை மாவட்ட பல ஊர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இந்த நிலைகளை ஆராய்ந்து மக்களுக்கு தேவையான உதவிகளையும், நிவாரண நடவடிக்கைகளையும் மேற்கொள்ள பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் நேற்றும், நேற்று முன் தினமும் நேரடியாகக் கள விஜயம் செய்து ஆராய்ந்ததுடன் தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

அம்பாறை அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரமவை சந்தித்து இடைத்தங்கல் முகாமில் உள்ள மக்களுக்கு சமைத்த உணவு வழங்குவதில் உள்ள நெருக்கடி நிலைகள், நிவாரண உதவி வழங்குதல், வெள்ளத்தில் மூழ்கியுள்ள மக்களை பாதுகாப்பான முறையில் தங்க வைத்தல், போக்குவரத்தில் மாற்று ஒழுங்குகளை செய்தல் போன்ற பல வேறு விடயங்களை ஆராய்ந்த அவர், துரித கதியில் நிவாரண பணிகளை முன்னெடுப்பது தொடர்பில் கலந்துரையாடியதுடன் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவை தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணப் பணிக்கு தேவையான நிதி ஏற்பாடுகளை அம்பாறை மாவட்டத்துக்கு அவசரமாக வழங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

மேலும் இறக்காமம், சம்மாந்துறை, கல்முனை, நாவிதன்வெளி, காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை, அட்டாளைச்சேனை போன்ற பிரதேச செயலக ஊர்களுக்கும் களவிஜயம் செய்து மக்களை சந்தித்து தேவைகள் தொடர்பிலும், வெள்ள அனர்த்த நிலைகள் தொடர்பிலும் கண்டறிந்து அவற்றை தீர்க்கும் விதமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். (அ)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்த சம்மாந்துறை பிரதேச செயலர்

அம்பாறை, ஜன. 13

சம்மாந்துறை பிரதேசத்தில் இரண்டு இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டு மக்கள் பாதுகாப்பான முறையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சம்மாந்துறை பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் காரணமாக மக்களின் குடியிருப்பு நிலங்களுக்குள் நீர் உட்புகுந்துள்ளது.

அதை தொடர்ந்து சம்மாந்துறை பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ குழுவின் ஒத்துழைப்போடு பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மல்கம்பிட்டி கிராம சேவையாளர் பிரிவில் உள்ள நெய்னா காட்டு கிராமத்தில் சுமார் தற்பொழுது வரை 19 குடும்பங்களைச் சேர்ந்த 77 உறுப்பினர்கள் சம்மாந்துறை தாறுஸ்ஸலாம் மகா வித்தியாலத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.



சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் உள்ள மல்வத்தை பிரதேசத்தில் வெள்ள நீர் வீடுகளுக்குள் உட்புகுந்ததில் பாதிக்கப்பட்ட மக்கள் சம்மாந்துறை மல்வத்தை விபுலானந்த மகா வித்தியாலத்தில் தற்பொழுது வரை 90 குடும்பங்களைச் சேர்ந்த 292 பேர் பாதுகாப்பான முறையில் தங்க வைக்கப்பட்டுள்ளதோடு அவர்களுக்கான உணவு மற்றும் ஏனைய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் ஹனிபா பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களுக்கு நேரடியாக சென்று பார்வையிட்டதோடு மக்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்டு மக்களுக்குரிய ஆலோசனைகளும் வழங்கினார். (அ)

# புதிய பஸ் தரிப்பிடம் கையளிப்பு

மட்டக்களப்பு, ஜன. 13

கல்குடா பிரதேசத்தை மையமாகக் கொண்டு கடந்த 10 வருடங்களாக இயங்கிவரும் அல் இஸ்லாஹ் சமூக சேவை அமைப்பின் 10ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு, ஓட்டமாவடி தேசிய பாடசாலைக்கு அருகாமையில் சேதமடைந்து காணப்பட்ட பஸ் தரிப்பிடத்தை அகற்றி, புதிய பஸ் தரிப்பிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு மக்கள்



பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு அல் இஸ்லாஹ் சமூக சேவை அமைப்பின் தலைவர் எம்.அனீஸ் அஹமட் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது. (அ)

# மட்டக்களப்பில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் விச ஜந்துக்கள், முதலைகள் நடமாட்டம் அதிகரிப்பு

மட்டக்களப்பு, ஜன. 13

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கன மழை மழை பெய்துவரும் நிலையில், மாவட்டத்தின் தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

நீர்நிலைகளில் நீர் நிரம்பியுள்ள நிலையில், அங்கிருந்து வெளியேறும் வெள்ளத்தோடு, முதலைகள் மற்றும் விச ஜந்துக்களும் வெளியேறி வருகின்றன.

நீர்நிலைகளில் இருந்து வெளியேறும் விச ஜந்துக்கள், அருகில் உள்ள மக்கள் குடியிருப்புக்களுக்குள் நுழையும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இன்று காலை மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட, அதிக மக்களான மக்கள் வாழும் கூழாவடிப் பகுதியில் வெள்ள நீரில் முதலையொன்று இனங்காணப்பட்டுள்ளது.

அச்சமடைந்த மக்கள் வன ஜீவராசிகள் திணைக்களத்திற்கு தகவலளித்ததன் அடிப்படையில், அவர்களால் முதலை பாதுகாப்பாக மீட்கப்பட்டது.

நேற்று முன் தினம் மாலை திருப்பழுகாமம் பகுதியில், குடியிருப்புக்குள் நுழைந்த முதலை, மாடு ஒன்றை பிடித்துச் சென்றது.

எனவே, நீர்நிலைகளை அண்டியுள்ள மக்களும், வெள்ளத்தில் மூழ்கியுள்ள குடியிருப்புப் பகுதிகளுக்குள் வசிக்கும் மக்களும் அவதானமாக இருக்குமாறு வனஜீவராசிகள் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (அ)

# ஹூதி கிளர்ச்சியாளர்கள் தொடர்ந்தும் அட்டகாசம்!

## ஏமனில் தாக்குதலை ஆரம்பித்த அமெரிக்கா, பிரித்தானியா

**லண்டன், ஜன. 13**

**ஏமனில் உள்ள ஹூதி கிளர்ச்சியாளர்கள் மீது அமெரிக்காவும் பிரிட்டனும் தாக்குதலைத் தொடங்கியுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.**

**ஈரானிய ஆதரவுடன் செயல்படும் ஹூதி கிளர்ச்சியாளர்கள் கடந்த ஆண்டு இறுதி முதல் செங்கடலில் பயணம் செய்த அனைத்துலகக் கப்பல்களைத் தாக்கினர்.**



இதற்கு பிறகு முதல்முறையாக அமெரிக்காவும், பிரித்தானியவும் பதிலடி தாக்குதலை தற்போது ஆரம்பித்துள்ளன.

தலைநகர் சனா உட்பட ஏமன் முழுவதும் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஹூதி தரப்பு உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலை 'அமெரிக்க-யூத-பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பு' என்று அது குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவும், பிரிட்டனும் அவுஸ்திரேலியா, பஹ்ரைன், கனடா, நெதர்லாந்து ஆகிய நாடுகளின் ஆதரவோடு ஏமனில் உள்ள ஹூதி கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதல் நடத்தியதாக நேற்றைய தினம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்திருந்தார்.

"செங்கடலில் அனைத்துலகக் கப்பல்களை ஹூதி தரப்பினர் தாக்கியதற்குப் பதிலடி இது. வரலாற்றில் முதல்முறையாக அவர்கள் கப்பல்கள் மீது ஏவுகணைகளைப் பாய்ச்சித் தாக்கியது குறிப்பிடத்தக்கது

அந்தத் தாக்குதல்கள், அமெரிக்க அதிகாரிகளுக்கும் கடலோடிகள், பங்காளித்துவத் தரப்பினருக்கும் ஆபத்து விளைவித்ததுடன் வர்த்தகம், கடலில் பயணம் செய்வதற்கான சுதந்திரம் ஆகியவற்றையும் ஆபத்துக்குள்ளாக்கின.

மக்களையும் தடையற்ற வர்த்தகத்தையும் காக்கும் பொருட்டு கூடுதல் நடவடிக்கை மேற்கொள்ளவும் தாம் தயங்கப் போவதில்லை" என ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

கடந்த அக்டோபர் மாதம் ஆரம்பமாகிய இஸ்ரேல்-ஹமாஸ் போர், மத்திய கிழக்கு வட்டாரத்தில் மேலும் பரவுவதை அண்மைய தாக்குதல் காட்டுவதாக சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# மாட்டுப்பண்ணை ஆரம்பித்த 'மெட்டா' உரிமையாளர் மார்க்



*லண்டன், ஜன. 13*

மெட்டா நிறுவனத்தின் நிறுவனர் மார்க் ஷூக்கர்பேர்க்கின் வணிகங்களில் மற்றொரு புதிய வணிகம் சேர்ந்துள்ளது.

அதாவது, ஷூக்கர்பேர்க் மாடு வளர்க்கும் புதிய பண்ணை தொழிலைத் ஆரம்பித்துள்ளார்.

தனது பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் கணக்கில் இது தொடர்பாக பதிவிட்டுள்ள அவர், உலகின் மிக உயர் தரமான மாட்டிறைச்சியை உற்பத்தி செய்வதே தனது இலக்கு என்று கூறியுள்ளார்.

இதனிடையே, இந்த பசுக்களுக்கு வழங்கப்படும் உணவு குறித்தும் ஜுஷூக்கர்பெர்க் கருத்து தெரிவித்துள்ளார். அதன்படி, அதே பண்ணையில் தயாரிக்கப்படும் உணவு பசுக்களுக்கு வழங்கப்படும் என்றும், ஷூக்கர்பெர்க் தனது மகள்களின் உதவியோடு இதனை மெருகுபடுத்துவார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# ஆப்கானிஸ்தானில் மீண்டும் நிலநடுக்கம்

*காபூல், ஜன. 13*

ஆப்கானிஸ்தானில் நேற்று அதிகாலை மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிச்டர் அளவில் 4.3 ஆக நிலநடுக்கம் பதிவானதாக அந்நாட்டு தேசிய நிலஅதிர்வு ஆய்வு மையம் தெரிவித்தது.

இன்று பதிவான நிலநடுக்கத்தால் அங்குள்ள கட்டிடங்கள் லேசாக அதிர்ந்தன. ஆப்கானிஸ்தானில் அடுத்தடுத்து ஏற்பட்டு வரும் நிலநடுக்கங்களால் மக்கள் கடும் அச்சத்தில் உள்ளனர்.

இதேவேளை ஆப்கானிஸ்தானில் நேற்று முன் தினமும் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் பதிவாகியிருந்தது. இது ரிச்டர் அளவில் 6.1 ஆக பதிவாகியிருந்தது.

ஆப்கானிஸ்தானில் நேற்று ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கம், இந்தியாவில் டெல்லி உள்ளிட்ட வடமாநிலங்களிலும் உணரப்பட்டன. குறிப்பாக டில்லியில் நிலநடுக்கத்தின் தாக்கம் கடுமையாக உணரப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# அமெ. எண்ணெய் கப்பலை சிறைப்பிடித்துள்ளது ஈரான்

## மத்திய கிழக்கு நீர் வழி போக்குவரத்தில் பதற்றம்

*தெஹ்ரான், ஜன. 13*



ஓமன் வளைகுடாவில் அமெரக்க எண்ணெய் கப்பலை தங்கள் படைகள் கைப்பற்றியதாக ஈரான் கூறியுள்ளது.

ஈரானின் கடற்படையினரால் "செயின்ட் நிகோலஸ்" என்ற குறித்த கப்பல் கைப்பற்றப்பட்டுள்ள தாக அரசு நடத்தும் ஐ.ஆர்.என்.ஏ. செய்தி நிறுவனம் வியாழக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரான் இஸ்லாமியக் குடியரசின் கடற்படை, நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் ஓமன் வளைகுடா கடல் பகுதியில் அமெரிக்க எண்ணெய்க் கப்பலைக் கைப்பற்றியது என்று குறித்த செய்தி நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது.

ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்த சம்பவம் அரங்கேறியுள்ளது.

இதனால் மத்திய கிழக்கு நீர்வழிகளூடான பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது. (அ)

# உக்ரைனுக்கான ஆதரவை 2.5 பில்லியன் பவுண்ஸ்களாக அதிகரித்தது பிரிட்டன்!

*லண்டன், ஜன. 13*

உக்ரைனுக்கு அடுத்தாண்டு 2.5 பில்லியன் பவுண்ட் இராணுவ உதவியை பிரித்தானியா வழங்கும் என பிரதமர் ரிஷி சுனக் அறிவித்துள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு தொடங்கியதை அடுத்து அந்நாட்டுக்கு வழங்கப்படும் பிரித்தானியாவின் மிகப்பெரிய அறிவிப்பு இதுவென்றும் கூறப்பட்டுள்ளது.

நீண்ட கால பாதுகாப்பை ஆதரிக்கும் புதிய ஒப்பந்தத்தில் பிரதமர் ரிஷி சுனக் கையொப்பமிடுவர் என்றும் இந்த தொகுப்பு உக்ரைனுக்கு பெரும் உதவியாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



குறித்த நிதியுதவியில் நீண்ட தூர ஏவுகணைகள், வான் பாதுகாப்பு மற்றும் பீரங்கி குண்டுகளை பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேநேரம் 200 மில்லியன் பவுண்ட் சில ஆளில்லா விமானங்களுக்காக செலவிடப்படும் என்றும் அவற்றில் பெரும்பாலானவை பிரித்தானியாவில் தயாரிக்கப்பட்டவை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மனிதாபிமான உதவிக்காக 18 மில்லியனும், உக்ரைனின் எரிசக்தி உள்கட்டமைப்பை வலுப்படுத்த உதவுதல் மற்றும் ஆங்கில மொழிப் பயிற்சிக்கான நிதியும் இதில் அடங்கும் என கூறப்பட்டுள்ளது. (அ)

# சாதாரண குடும்ப பெண்ணை மணந்தார் புரூணை இளவரசர்

புரூணை இளவரசர் அப்துல் மட்டீன் சாதாரண குடும்பத்துப் பெண்ணான 29 வயது யாங் மூலியா அனிஷா ரோஸ்னாவை கரம்பிடித்துள்ளார்.

இவர்களின் மண விழா மிக ஆடம்பரமான முறையில் பத்து நாள்களுக்குக் கொண்டாடப்படவிருக்கிறது. புரூணை தலைநகர் பண்டார் ஸ்ரீ பகவானில் உள்ள தங்கக் கூரை வேய்ந்த



பள்ளி வாசலில் இஸ்லாமிய முறைப்படி இத் திருமணம் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இளவரசர் அப்துல் மட்டீன், புரூணை மன்னர் ஹசானல் போல்கியாவின் பத்தாவது குழந்தையாவார். போலோ விளையாட்டில் இவருக்கு ஈடுபாடு உண்டு.

மணப்பெண் யாங் மூலியா அனிஷா ரோஸ்னா, மன்னரின் முக்கிய ஆலோசகர்களில் ஒருவரின் பேத்தி. அலங்காரப் பொருள் விற்பனை நிறுவனத்தின் உரிமையாளரான இவர், சுற்றுப்பயண வர்த்தகம் ஒன்றின் இணை உரிமையாளர்.

அரச குடும்ப மணவிழாவின் உச்சகட்டமாக ஜனவரி 14ஆம் திகதி, 1,788 அறைகள் கொண்ட அரண்மனையில் பெரிய கொண்டாட்ட நிகழ்ச்சி நடைபெறவிருக்கிறது. பின்னர் அணிவகுப்பும் இடம்பெறும்.

அனைத்துலக அளவில் அரச குடும்பத்தினரும் அரசியல் தலைவர்களும் இதில் கலந்துகொள்வர்.

ஜனவரி 14ஆம் திகதி அரச குடும்ப வாகனத்தில் புதுமணத் தம்பதி வீதி வலம் வருவதைக் காண, புருணை மக்கள் திரளாகக் கூடுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# மொட்டு கூட்டணியே வெற்றிநடை போடும்!

## திடமாக சொல்கிறார் எஸ்.எம். சந்திரசேன



**கொழும்பு, ஜன. 13**
**சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையில் அமையும் கூட்டணியே அடுத்த தேர்தல்களில் வெற்றி நடைபோடும் என்று அக்கட்சியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.**

பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அடுத்த ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ள நாம் தயார். எனினும், வேட்பாளர் குறித்து இன்னும் முடிவெடுக்கப்படவில்லை. வெற்றி வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படுவார். இது விடயத்தில் கட்சி எடுக்கும் முடிவுக்கு கட்டுப்படுவேன்.

அடுத்த பொதுத்தேர்தலிலும் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையில் அமையும் கூட்டணியே வெற்றி பெறும்.

அதேவேளை, சிறி லங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்களுக்கு எதிராக சேறுபூசும் நடவடிக்கை இடம்பெறுகின்றது. கப்பல் விவகாரம்கூட இதன் ஓர் அங்கம்தான்-என்றார். (அ)

# பெண்கள் வேலைக்காக வெளிநாடு செல்வதை தடுப்பதற்கு புதிய சட்டம்



கொழும்பு, ஜன. 13
ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளை பெண்கள் நாட்டிற்குள் விட்டு வெளிநாடு செல்வதை தடுக்கவும், பெண்கள் வேலைக்காக வெளிநாடு செல்வதை தடுக்கவும் புதிய சட்டம் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் என பெண்கள் மற்றும் குழந்தைகள் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறு குழந்தைகளுடன் தாய்மார்கள் வெளிநாடுகளுக்குச் செல்வது சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரிப்பதற்குக் காரணம். சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு ஏழாயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம்.

துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர்கள் மற்றும் பெண்கள் நீதிமன்றில் ஆஜராகும் போது அவர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாவதை தடுப்பதற்காக வீடியோ தொழில்நுட்பம் மூலம் அவர்களை தொடர்பு கொள்ளவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது-என்றார். (அ)

# கலதுர ஆற்றுப் பாலம் இடிந்தது





கொழும்பு, ஜன. 13
இரத்தினபுரி அயகம பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கலதுர கிராம உத்தியோகத்தர் பிரதேசத்துக்கு அருகில் கலதுர ஆற்றுப் பாலம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை முற்றாக இடிந்து வீழ்ந்துள்ளதுடன் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது.

கடும் மழை காரணமாகவே பாலம் இடிந்து வீழ்ந்துள்ளது.

# 'ரின்' இலக்கம் பெற ஒவ்வொரு நாளும் சுமார் 25 ஆயிரம் பேர் விண்ணப்பம்!

கொழும்பு, ஜன. 13
ஒவ்வொரு நாளும் சுமார் 25,000 பேர் வரி செலுத்துவோர் அடையாள எண்ணைப் பெற பதிவு செய்வதாக உள்நாட்டு வருவாய்த் துறை பணியாளர்கள் அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஜே.டி.சந்தன தெரிவித்தார்.

இதனால் வாரந்தோறும் ஒரு லட்சம் பேர் பதிவு செய்து வருகின்றதாக கூறியுள்ளார். ஒன்லைன் முறை மூலம் ரின் எண் பெறுவதற்கு பெரும்பாலானோர் பதிவு செய்து வருவதாகவும், மேலும் பலர் உள்ளாட்சி அலுவலகங்களுக்கு வந்து உரிய விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதாகவும் செயலர் கூறினார்.

தற்போது இரண்டு மில்லியனுக்கும் அதிகமானோர் டின் எண்ணைப் பெற பதிவு செய்துள்ளதாகவும், கடந்த ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்குள் சுமார் ஒரு மில்லியன் பேர் பதிவு செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், ரின் நம்பர் கட்டாயமாக்கும் கால அவகாசத்தை நீடிக்கவேண்டும் என மக்களிடம் பெரும் கோரிக்கை எழுந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ரின் இலக்கத்தை கட்டாயமாக்குவதற்கான காலக்கெடுவை ஏப்ரல் மாதம் வரை ஒத்திவைப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

முன்னதாக, பெப்ரவரி 1 ஆம் திகதி முதல் ரின் நம்பரைப் பெறுவது கட்டாயம் என்று நிதி அமைச்சு அறிவித்திருந்தது. நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் ரின் இலக்கத்தைப் பெற்றுக் கொள்ளும் வசதி ஏற்படுத்தப்படும் எனவும், இது தொடர்பில் விசேட அதிகாரியொருவரும் தனி அதிகாரியொருவரும் நியமிக்கப்படவுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய அண்மையில் தெரிவித்தார். (அ)

# துஷ்பிரயோகங்களைத் தடுக்க பஸ்களில் சி.சி.ரி.வி கமெராக்கள்

கொழும்பு, ஜன. 13
வன்முறை மற்றும் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் கவனம் செலுத்தும் வகையில் அனைத்து பேருந்துகளிலும் சி.சி.ரி.வி கமராக்கள் பொருத்தப்பட உள்ளதாக இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் பெருமளவான மாணவர்கள் போசாக்கு குறைப்பாட்டுக்கு ஆளாகியுள்ள நிலையில் புரோட்டீன் நிறைந்த போசாக்கான உணவை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள அனைத்து பாலர் பாடசாலை மாணவர்களுக்கும் காலை உணவு வழங்க எதிர்பார்க்கின்றோம்.

அதேபோல் பெண்கள் வெளிநாடு செல்லும்போது 05 வயதுக்கு குறைவான குழந்தைகளிருக்கும் எத்தனை தாய்மார் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் என்பது தொடர்பிலான தகவல்களை பிரதேச செயலக மட்டத்தில் தேடி அறியவுள்ளோம் -என்றார். (அ)

# இணையவழி கடன் மோசடிகளை தடுக்க புதிய அதிகாரங்களுடன் கூடிய சட்டங்கள்

கொழும்பு, ஜன. 13
இணையவழி கடன் மோசடிகளை தடுக்கும் வகையில் புதிய அதிகாரங்களுடன் கூடிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கை நிகர நிதி மற்றும் கடன் ஒழுங்குமுறை சட்டமூலம் எதிர்வரும் காலங்களில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும், ஆனால் இணையவழி கடன் போன்ற விடயங்களை சட்டமூலத்தின் மூலம் முழுமையாக உள்ளடக்க முடியாது எனவும் சேமசிங்க கூறினார்.

இணையவழி கடன் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே சேமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ)

# போதை மாத்திரைகளுடன் பாடசாலை மாணவன் கைது

கொழும்பு, ஜன. 13
கண்டி - நுகவெல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் மாணவன் ஒருவர் போதை மாத்திரைகளுடன் அலதெனிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் வரெல்லகம பிரதேசத்தை சேர்ந்த 16 வயதுடைய பாடசாலை மாணவராவார்.

குறித்த மாணவன் தனது பாடசாலையில் உள்ள சக மாணவர்களுக்கு போதைப்பொருள் மாத்திரைகளை விநியோகிப்பதாக கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து பொலிஸார் மேற்கொண்ட சோதனையின்போது சந்தேகநபரான மாணவன் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடத்திலிருந்து 6 போதை மாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. (அ)

*1500 ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டு;*

# முரண்பட்ட சாட்சியங்களால் பொலிஸ் சார்ஜன்ட் விடுதலை!

கொழும்பு, ஜன. 13
1,500 ரூபா இலஞ்சம் பெற்றதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்த மதவாச்சி பொலிஸின் முன்னாள் பொலிஸ் சார்ஜன்ட் எம்.டி.சரத் விஜயதுங்கவை இலஞ்சக் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்க கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ் நேற்று உத்தரவிட்டார்.

தனது தீர்ப்பை அறிவித்த நீதிவான், முரண்பட்ட சாட்சியங்கள் காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள் என தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் திகதி மோட்டார் சைக்கிள் ஒன்றை விடுவிப்பதற்காக 1,500 ரூபாவை கோரிய மற்றும் பெற்றமைக்காக இலஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுகள் விசாரணை ஆணைக்குழு இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தது.

இந்நிலையிலேயே இந்த வழக்கு விசாரணைகளின்போது முரணான சாட்சியங்கள் காரணமாக முதல் இரண்டு குற்றச்சாட்டுக்களிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவரை விடுவிக்க நீதவான் உத்தரவிட்டார். (அ)

## 50ஆயிரம்...

செங்கலடி, கிரான், வவுணதீவு, வாகரை உள்ளிட்ட பிரதேச செயலகங்களிலேயே நெல் பயிர்கள் அதிகம் அழிவடைந்தன என்றும் அவர் கூறினார். (ஐ)

## பணப்பரிசு...

உங்களுக்கு கிடைத்துள்ளது என்று கூறியுள்ளார்.

அத்துடன், அந்தப் பணத்தைப் பெறுவதற்காக 18 இலட்சம் ரூபாயை வரி செலுத்த வேண்டும் என்று கூறி கணக்கு இலக்கம் ஒன்றையும் வழங்கியுள்ளனர்.

இதனை நம்பிய நபர் குறித்த கணக்கு இலக்கத்துக்கு 18 இலட்சம் ரூபாயை வைப்பிலிட்டுள்ளார். அதன் பின்னர் தன்னுடன் தொடர்பு கொண்ட இலக்கத்துக்கு தொடர்பை ஏற்படுத்தியுள்ளார். அந்த இலக்கம் செயலிழந்திருந்தது.

இதையடுத்து, குறித்த தொலைத் தொடர்பு சேவை வழங்கும் நிறுவனத்துக்கு சென்று விசாரித்துள்ளார். அப்போதே அவருக்கு தான் ஏமாற்றப்பட்ட விடயம் தெரிய வந்தது. இதையடுத்து, அவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

இதன்படி, விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் தென்னிலங்கையை சேர்ந்த நபர் ஒருவரை கைது செய்தனர். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட தொடர் விசாரணைகளை அடுத்து, இந்த மோசடிக்கு துணைபோன மற்றொரு நபரையும் கைது செய்துள்ளனர். (ஐ)

## மலையகத்...

இளவரசி ஆன் ஏற்க வேண் டும்.

நலிவுற்ற பிரிவினரான நமது மக்கள் தொடர்பிலான குற்றச்சாட்டு பட்டியலை இளவரசி ஆன் மீது சுமத்த நான் விரும்பவில்லை. ஆனால், இந்த கறுப்பு பக்கம் தொடர்பான நினைவூட்டலை நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

இன்று இந்திய வம்சாவளி மலையக தமிழர் என்று இனரீதியாக அழைக்கப்படும் இந்த மக்கள், பிரித்தானிய முடியரசின் பிரதிநிதிகளான கிழக்கிந்திய கம்பனியால் 1823ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டவர்கள். இன்றும்கூட, எமது உழைக்கும் மக்கள் பெருந்தோட்ட முகாமை நிறுவனங்களுடன் பின்னிப்பிணைக்கப்பட்டுள்ளனர். பிரித்தானியாவின் வெள்ளை இராச்சியம் போன பிறகு உள்நாட்டு பிறவுண் இராச்சியம் பெருந்தோட்டங்களில் எமது மக்களை இன்று ஆள்கிறது. இதனால் இன்னமும் இந்நாட்டின் முழுமையான பிரஜைகளாக கருதப்படாமல், நமது மக்கள் வாழ்கிறார்கள்.

இந்தியாவின் பாண்டிச்சேரி மக்களுக்கு பிரான்ஸ் ஆட்சியாளர்கள் செய்துவிட்டு சென்ற ஏற்பாடுகளை ஒத்த ஏற்பாடுகளைக்கூட பிரித்தானியா எமது மக்களுக்கு செய்யவில்லை. ஆகவே, கடந்தகாலங்களில் இழந்துவிட்ட வளர்ச்சியை மீளப்பெறும், விசேட ஒதுக்கீட்டு செயல்திட்டத்தின் அடிப்படையில், இலங்கையின் மிகவும் பின்தங்கிய பிரிவினரான பெருந்தோட்டங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு உதவிட முன்வருமாறு பிரிதானியாவை நான், இந்த மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மிகப்பெரிய கட்சியின் தலைவர் என்ற முறையில் கோருகிறேன்.

இன்று (நேற்று) உங்களுக்கு பிரித்தானிய தூதுவர் அன்ரூ பெட்றிக் நடத்துகின்ற வரவேற்பு நிகழ்வுக்கு எனக்கு அழைப்பு விடுத்துள்ளார். நான் நாட்டில் இல்லாத காரணத்தால் அதில் கலந்து கொள்ள இயலாமல் இருக்கின்றமை தொடர்பில் அவருக்கு அறிவித்துள்ளேன். எமது கோரிக்கைள் தொடர்பில் இலங்கையிலுள்ள பிரித்தானிய தூதுவரிடம் உரையாடி உள்ளேன் - தொடர்ந்தும் உரையாட உள்ளேன் - என்றார். (ஐ)

## கந்தகாடு...

இவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைக்கு சோமாவதி பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு இடையூறாக உள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

## காரைநகர்..

போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அறிய வருகின்றது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் 4 பேரை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்துள்ளனர். (ஐ)

## வலைகளை...

இழுவைப் படகுகளில் அத்துமீறி வந்த இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்ட னர். இவர்கள் சுமார் 3 கிலோ மீற்றர் நீளப்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டி ருந்தனர். அப்போதே, 10 பேருக்கு சொந்தமான வலைகளை இந்திய மீனவர்கள் அறுத்துச் சென்றனர் என்று பருத்தித்துறை மீனவர்கள் குற்றஞ்சாட்டினர். (ஐ-02)

## நாட்டின்...

தனியார் கடன் வழங்குநர்களிடையே உலகளவில் நம்பிக்கையை அதிகரிக்கின்றது என்றும் ஐ. எம். எவ். தெரிவித்துள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான முதலாவது மீளாய்வை வெற்றிகரமாக நிறைவு செய்தமைக்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு வாழ்த்து தெரிவித்த சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு, ஜனாதிபதியின் தலைமையில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட சவாலான பொருளாதார சீர்திருத்தங்களைப் பாராட்டியது.

ஆசியாவின் முன்னோடி முயற்சியான ஆட்சியைக் கண்டறியும் அறிக்கையை வெளியிடுவதில் இலங்கையின் முயற்சிகளை இதன்போது பாராட்டினர்.

குறிப்பாக, கொள்கை சார்ந்த விடயங்கள் மற்றும் நிதித்துறையில் ஸ்திரத்தன்மை ஆகியவை சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தால் ஊக்குவிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட தூதுவர் பீட்டர் ப்ரூவர் தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலப்பகுதியில் பணியாளர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டதன் பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கைகளின்படி இலங்கை நம்பிக்கையுடன் அரசாங்க வருமானத்தை உயர்த்தியுள்ளதாக சமீபத்திய சந்திப்பில் தெரியவந்துள்ளதாகவும், இதன் மூலம் சர்வதேச சமூகம், உத்தியோகபூர்வ கடன்வழங்குநர்கள் மற்றும் தனியார் கடன்வழங்குநர்களின் நம்பிக்கை அதிகரிக்க காரணமாக உள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதனிடையே, மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்களில் வெற்றியை அடைவதற்கு அரச ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, திறன் அபிவிருத்தியில் இலங்கையின் பங்காளித்துவமும் சர்வதேச நாணய நிதியத்தால் மதிப்பீடு செய்யப்பட்டது.

சீர்திருத்தங்களை செயல்படுத்துவதில் முக்கியமான அரச சேவையின் திறனை வளர்ப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்கமைய, இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் வாரங்களில் இது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன - என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் ஜனாதிபதியை ஐ. எம். எவ். குழுவினர் சந்தித்துப் பேசிய போதே மேற்கண்ட விடயங்கள் தெரிவிக்கப்பட்டன. (ஐ)

# 20 இலட்சம் சுற்றுலா பயணிகளை இந்த ஆண்டில் எதிர்பார்க்கிறோம்!

### இராஜாங்க அமைச்சர் டயானா

கொழும்பு, ஜன. 13



சுற்றுலாத்துறை புத்துயிர் பெற்றுள்ள நிலையில் இந்த ஆண்டு சுமார் 20 இலட்சம் சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும், இதன் மூலம் 600 கோடி அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்ட எதிர்பார்க்கப்படுவதாகவும் சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 106வீதம் அதிகரித்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், "கடந்த காலத்துடன் ஒப்பிடும்போது தற்போது சுற்றுலாத் துறை புத்துயிர் பெற்றுள்ளது. சுமார் மூன்று வருடங்களாக பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்த சுற்றுலாத்துறை இன்று ஓரளவு ஸ்திரமான நிலைக்கு வந்துள்ளது. 2023 டிசெம்பர் இறுதியில் 106 வீதம் சுற்றுலாத்துறையில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது.

இந்த வருடம் மேலும் சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும் இன்னும் அதிகமாக சுற்றுலாப் பயணிகளை இந்நாட்டுக்கு வரவழைக்கவும் அவசியமான பணிகளை நாம் தற்போது மேற்கொண்டு வருகின்றோம்.

2023ஆம் ஆண்டில் 15 இலட்சம் சுற்றுலா பயணிகளை இந்நாட்டுக்கு வரவழைப்பதே எமது இலக்காக இருந்தது. நாம் அந்த இலக்கை ஓரளவுக்கு அடைந்துகொண்டோம் என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட வேண்டும்.

இவ்வருடம் எமது இலக்கு குறைந்தது 20 இலட்சம் சுற்றுலா பயணிகளை இந்நாட்டுக்கு அழைத்து வருவதாகும். அதன் ஊடாக 600 கோடி டொலர் வருமானம் எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது விதிக்கப்பட்டுள்ள வற் வரி காரணமாக, சுற்றுலா தளங்களின் பிரவேசப் பத்திரங்களுக்கான கட்டணங்கள் அதிகரித்திருக்கின்றமை தொடர்பில் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம்.

வற் வரி எவ்வளவு தூரம் எமது சுற்றுலாத் துறையில் தாக்கம் செலுத்தியுள்ளது என்பது குறித்தும் சுற்றுலாத் துறைக்கு இந்த வற் வரி தொடர்பில் நிவாரணம் வழங்குவது தொடர்பிலும் சுற்றுலாத் துறை அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தொடர்ந்தும் கலந்துரையாடுகின்றார். அந்தப் பணிகள் வெற்றியடையும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம் - என்றார். (ஐ)

## பயங்கரவாத...

உட்படுத்தி மக்கள் விடுதலை முன்னணியினர் நேற்று வெள்ளிக்கிழமை உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்தனர். இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டு மக்களை நெருக்கடிக்கு உள்ளாக்கும் வகையில் வற் வரியை அதிகரித்து அத்தியாவசிய பொருட்களின் விலைகளை அரசாங்கம் அதிகரித்துள்ளது. அரசாங்கத்துக்கு எதிராக நாட்டு மக்கள் எதிர்ப்பை தெரிவித்து வீதிக்கு இறங்குவார்கள் இதனை தடுப்பதற்காகவே உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம், நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் என்பன கொண்டு வரப்பட்டுள்ளன.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதேபோல் நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் எதிர்வரும் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் விவாதத்தக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. நாட்டு மக்களை அடக்கும் சட்டமூலத்தை சமர்ப்பித்து அரசாங்கம் புதிய வருடத்தை ஆரம்பித்துள்ளது.

நிகழ்நிலை காப்பு சட்டமூலம், பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் என்பன நாட்டு மக்களின் பேச்சு சுதந்திரத்துக்கு முற்றிலும் எதிரானது. பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளோம். நாட்டு மக்களின் அடிப்படை பேச்சு உரிமை மற்றும் கருத்து சுதந்திரத்தை பாதுகாக்கும் வகையில் உயர்நீதிமன்றம் சிறந்த தீர்ப்பை வழங்கும் என எதிர்பார்க்கிறோம் - என்றார்.

# முதியவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஜன. 13

உயிரிழந்து மூன்று நாட்கள் கடந்த நிலையில் முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

நல்லூர் - சட்டநாதர் வீதியில் உள்ள வீடொன்றில் இருந்தே குறித்த சடலம் நேற்று வியாழக்கிழமை மீட்கப்பட்டது.

இதே இடத்தை சேர்ந்த யோகேந்திரன் விஸ்வநாதபிள்ளை (வயது 61) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். இவர் சிறீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் ஓய்வுபெற்ற பொறியியலாளர் ஆவார்.

மாரடைப்பு காரணமாகவே அவர் உயிரிழந்தார் என்று மரண விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ரணிலுடன்...

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், உள்நாட்டு, வெளிநாட்டு பிரதிநிதிகளை பயன்படுத்தி சஜித்தையும் ரணிலையும் இணைக்க பெரும் அரசியல் தந்திரங்கள் முன்னெடுக்கப்படுவதாக சமூக வலைதளங்கள் மற்றும் சில ஊடகங்களில் பரப்பப்படுகின்றன.

வெளிநாடுகளின் ஆண், பெண் தூதுவர்களும் அவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுகின்றனரெனவும் தகவல்கள் - வதந்திகள் பரப்பப்படுகின்றன. ஆனால், வெளிநாட்டு ஆண், பெண் தூதுவர்கள் எமது நாட்டின் உள்ளக அரசியல் திருமணங்களுக்காக என்னுடன் கதைத்ததில்லை - கதைக்கப்போவதும் இல்லை. அவை முழுப்பொய்யாகும். பணம் கொடுத்தே இவ்வாறான பொய் செய்திகள் பரப்பப்படுகின்றன. இந்த பொய்யை மக்களிடையே பரப்புவதை உடனடியாக நிறுத்துங்கள்.

எங்களுக்கு அரசியல் 'டீல்'களை போட வேண்டிய அவசியமில்லை. பொதுமக்களின் முழுமையான ஆதரவு எமக்கு இருக்கிறது. எங்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தை அமைக்க நடவடிக்கை எடுப்போம். அதற்கான மக்களின் ஆசிர்வாதம் எமக்கு எப்போதும் இருக்கிறது - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இலங்கை பொருளாதாரம் கணிசமாக முன்னேற்றம்!

## ஜப்பான் நிதி அமைச்சர் பாராட்டு

கொழும்பு, ஜன. 13

**இலங்கையின் பொருளாதாரம் கணிசமாக முன்னேற்றம் கண்டிருப்பதாக ஜப்பான் நிதி அமைச்சர் சுசுகி சுனிச்சி தெரிவித்தார்.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜப்பான் நிதி அமைச்சர் சுசுகி சுனிச்சிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார்.

அத்துடன், ஜனாதிபதியின் சிறந்த தலைமைத்துவத்தை பாராட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் முதலாவது மீளாய்வை இலங்கை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதாகவும், இலங்கையில் ஏற்பட்டுள்ள வங்குரோத்து நிலைமை சர்வதேசத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும் இதன்போது அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தநிலையில், இலங்கையின் பொருளாதார நிலைமையில் ஏற்பட்டுள்ள சாதகமான முன்னேற்றம் நம்பிக்கைக்குரியது என்றும், இது இலங்கை மீதான உத்தியோகபூர்வ மற்றும் தனியார் கடன் வழங்குநர்களின் சர்வதேச நம்பிக்கையை மேம்படுத்துவதாக அமைந்துள்ளதாகவும் ஜப்பான் நிதியமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# நீர் கட்டணம் குறைக்கப்படும்!



கொழும்பு, ஜன. 13

இடம்பெறவுள்ள மின் கட்டண குறைப்புக்கு இணைந்ததாக, நீர் கட்டணமும் குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்ட மைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

மக்களுக்கு அதிகபட்ச நிவாரணங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் இதன்போது கூறினார்.

“எதிர்காலத்தில் நீர் கட்டணம் தொடர்பான விலைச் சூத்திரத்தை அறிமுகப்படுத்த உள்ளோம். இதனூடாக மக்களுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நாங்கள் செயற்படபோவதில்லை. தண்ணீரை சுத்திகரிக்க தேவையான முக்கிய காரணிகளில் மின்சாரம் ஒன்று. எனவே மின் கட்டணம் குறைக்கப்பட்டால் நிச்சயமாக நீர் கட்டணமும் குறைக்கப்படும்” என அமைச்சர் குறிப்பிட்டார்.

# அமைச்சர் கெஹலியவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி முறைப்பாடு!

கொழும்பு, ஜன. 13

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று நேற்று குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

காவிந்த ஜயவர்தன, இந்துனில் திஸாநாயக்க, முஜிபர் ரஹ்மான் மற்றும் வசந்த பண்டார உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டை சமர்ப்பித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முஜிபர் ரஹ்மான், மனிதர்களுக்கு தீங்கு விளைவிக்கும் மனித இம்யூனோகுளோபுலின் என்ற சர்ச்சைக்குரிய மருந்தை இறக்குமதி செய்ததன் பின்னணியில் கெஹலிய ரம்புக்வெல உள்ளார்.

இதுவரையில் அவரை கைது செய்யாமை தொடர்பில் சிக்கல் ஏற்பட்டுள்ளது-என்றார். (அ)

# ஜெனிற்றா பிணையில் விடுதலை

வவுனியா, ஜன. 13

வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் தலைவி சி.ஜெனிற்றா நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் வவுனியாவுக்கு விஜயம் செய்ததுடன் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற வன்னி மாவட்டங்களுக்கான ஒருங்கிணைப்புகுழுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

இதன்போது வடக்கு-கிழக்கு வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி உட்பட இருவர் நீதிமன்றக் கட்டளையை மீறியதாக தெரிவித்து வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அன்றையதினம் மாலை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது சங்கத்தின் தலைவி சி.ஜெனிற்றா நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டதுடன், மற்றைய பெண் அன்றைய தினமே பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில் குறித்த வழக்கானது நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் சங்கத்தின் தலைவியை ஒரு இலட்சம் ரூபாய் பிணையில் விடுவித்து நீதவான் உத்தரவிட்டார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சி.ஜெனிற்றா,

நாங்கள் ஜனாதிபதியை சந்திப்பதற்கே அனுமதி கேட்டிருந்தோம். மாறாக எந்தவிதமான வன்முறைகளையும் நாம் மேற்கொள்ளவில்லை.

அரச சொத்துக்களை சேதப்படுத்தவில்லை. வீதியினை மறிக்கவில்லை. ஆனால் பொலிஸார் எங்களை பெண்கள் என்றும் பார்க்காது அநாகரிகமான முறையிலேயே கைது செய்தனர்.

கொலைக்குற்றங்களை செய்தவர்களைக்கூட இப்படி நடாத்தியிருக்கமாட்டார்கள்-என்றார். (அ)

# கடுமையான நெருக்கடியில் சிறிலங்கன் எயார்லைன்ஸ்

கொழும்பு, ஜன. 13

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் விமானங்களில் உள்ள பிரச்சனைகளின் காரணமாக பல சிக்கல்களை சந்தித்து வருவதாக நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானங்களின் காலதாமதம் மற்றும் பயணங்கள் ரத்து செய்யப்படுவது குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை கூறினார்.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான 4 விமானங்களை பழுதுபார்க்கவேண்டிய உதிரிபாகங்கள் இல்லாத காரணத்தினால் நிறுத்திவைக்கவேண்டியுள்ளது.

சிறிலங்கன் எயார்லைன்ஸில் கடந்த வருடம் மட்டும் போதிய விமானங்கள் இல்லாததால் நூற்றுக்கணக்கான விமான பயணங்கள் ரத்து செய்யப்பட்டிருந்தன.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் முன்பு 24 விமானங்களை கொண்டிருந்தது. அவற்றில் தற்போது 18 விமானங்கள் மட்டுமே பறக்கும் மட்டத்தில் உள்ளன.

தற்போது பயன்பாட்டில் இல்லாத இரண்டு விமானங்களை திருப்பி அனுப்பிவிட்டு மூன்று புதிய விமானங்களை வாங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் நாட்டில் நிலவும் நிதி நெருக்கடியின் காரணமாக, அந்த கொள்முதல்களும் வெற்றி பெறவில்லை.

இந்நிலையில், பறக்கக்கூடிய நிலையிலுள்ள 4 விமானங்களுக்கும் மிகக் குறைந்த பழுது பார்க்கும் பணிகள் மாத்திரமே தேவைப்படுகின்றன.

அதனை பராமரித்தால், விமான அட்டவணைகளில் உள்ள பயணங்கள் இரத்து செய்யப்படுவதை கணிசமான அளவு கட்டுப்படுத்த முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார். (அ)

# கிழக்கில் வெள்ளத்தில் சிக்கி சிமெந்து, மா லொறிகள் விபத்து

## 600 சிமெந்து மூடைகள் நாசம்

திருமலை, ஜன. 13

திருகோணமலையில் இருந்து சிமெந்து ஏற்றிச் சென்ற லொறி ஒன்று வாழைச்சேனைப் பகுதியில் வெள்ளத்தில் சிக்கியதில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

குறித்த விபத்தில் லொறியில் ஏற்றிச்செல்லப்பட்ட 600 சிமெந்து மூடைகளும் நாசமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் வாழைச்சேனையில் கோதுமை மா ஏற்றிச் சென்ற லொறியொன்றும் வெள்ளத்தில் சிக்கிய தில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்துக்குள்ளான லொறியில் உள்ள மாவை மற்றுமொரு லொறிக்கு மாற்றுவதற்கான முயற்சிகள் இடம்பெற்றதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

# முடிவுக்கு வந்த சுகாதார சேவை ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

## ஜனாதிபதி தலையிடாவிட்டால் எதிர்காலத்தில் மீண்டும் போராட்டம்

கொழும்பு, ஜன. 13

சுகாதார சேவையின் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து ஆரம்பித்துள்ள பணிப்புறக்கணிப்பு போராட்டம் நேற்று காலையுடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

வைத்தியர்களுக்கு வழங்கப்படவுள்ள 35,000 ரூபா கொடுப்பனவை தங்களுக்கும் வழங்குமாறு கோரியே மேற்படி பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த கொடுப்பனவை வழங்குவதற்கு அமைச்சரவை எடுத்த தீர்மானத்துடன், சுகாதார ஊழியர்கள் கடந்த செவ்வாய்கிழமை பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இதனால், நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகளின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த சுகாதார சேவை தொழிற்சங்க கூட்டமைப்பின் அழைப்பாளர் ரவி குமுதேஷ்,

இந்த பிரச்சினைக்கு தீர்வு காண ஜனாதிபதி தலையிடாவிட்டால் எதிர்காலத்தில் மீண்டும் தொழில்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக தெரிவித்தார். (அ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# ரோஹித் சர்மா தனித்துவ சாதனை!

மொகாலி, ஜன. 13

சர்வதேச இருபது - 20 கிரிக்கெட்டில் ஓர் அணி வெற்றி பெற்ற 100 போட்டிகளில் அங்கமாக இருந்த முதல் வீரர் என்ற பெருமையை ரோஹித் சர்மா பெற்றுள்ளார்.

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியிலேயே அவர் இந்த சாதனையைப் படைத்தார்.

இந்த போட்டியில் இந்தியா வெற்றி பெற்றதால் சர்வதேச இருபது - 20 போட்டிகளில் ரோஹித் சர்மா ஒரு தனித்துவமான உலக சாதனையை படைத்துள்ளார். அதாவது சர்வதேச இருபது - 20 கிரிக்கெட்டில் ஓர் அணி வெற்றி பெற்ற 100 போட்டிகளில் அங்கமாக இருந்த முதல் வீரர் என்ற தனித்துவமான உலக சாதனையை ரோஹித் சர்மா படைத்துள்ளார்.

ரோகித் சர்மா இந்திய அணிக்காக தம்முடைய கிரிக்கெட் வாழ்வில் இதுவரை 149 ரி -20 போட்டிகளில் விளையாடியுள்ளார். அதில் 100 முறை இந்திய அணி வென்றுள்ளது. இந்த வரிசையில் 2ஆவது இடத்தில் பாகிஸ்தான் வீரர் சொஹைப் மாலிக் (86 வெற்றிகள்) உள்ளார். (ஐ)

# ஹசரங்கவின் சிறப்பான ஆட்டத்தால் சிம்பாப்வே தொடர் இலங்கை வசம்!

கொழும்பு, ஜன. 13



சிம்பாப்வேக்கு எதிரான 3ஆவதும் கடைசியுமான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 8 விக்கெட்களால் வெற்றியீட்டிய இலங்கை, தொடரை 2 - 0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

வனிந்து ஹசரங்கவின் தனிப்பட்ட சாதனை மிகு பந்தவீச்சு பெறுதியும் அணித் தலைவர் குசல் மெண்டிஸின் அதிரடி அரைச் சதமும் இலங்கைக்கு இலகுவான வெற்றியை ஈட்டிக்கொடுத்தன.

நேற்று முன்தினம் நடந்த இந்தப் போட்டி பல தடவைகள் மழையால் தடைப்பட்டது. இதனால், 27 ஓவர்களாக போட்டி மட்டுப்படுத்தப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே 22.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 96 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இடையில் ஆட்டம் தடைப்பட்டபோது ஸிம்பாப்வே 7.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 40 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இரவு 8 மணிக்கு மீண்டும் தொடங்கியபோது ஆட்டம் 27 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது. வனிந்து ஹசரங்கவின் அசத்தலான பந்துவீச்சால் சிம்பாப்வே 96 ஓட்டங்களுக்கு சுருண்டது.

துடுப்பாட்டத்தில் ஜோய்போர்ட் கம்பி (29), டக்குட்ஸ்வனாஷே கய்ட்டானோ (17), சிக்கந்தர் ராஸா (10), லூக் ஜொங்வே (14), வெலிங்டன் மஸக்கட்ஸா (11) ஆகியோரின் ஓட்டங்களே அதிகபட்சமாக அமைந்தன.

சிம்பாப்வேயினால் நிர்ணயிக்கப்பட்ட 97 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை 16.4 ஓவர்களில் 2 விக்கெட்களை மாத்திரம் இழந்து 97 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

முதலிரண்டு போட்டிகளில் பிரகாசிக்கத் தவறிய அவிஷ்க பெர்னாண்டோவுக்கு மற்றொரு வாய்ப்பு வழங்கப்பட்டபோதிலும் அவர் இத் தொடரில் இரண்டாவது தடவையாக ஓட்டம் பெறாமல் ஆட்டம் இழந்தார். எனினும், ஆரம்ப வீரராக அறிமுகமான ஷெவன் டானியல் பொறுமையுடன் துடுப்பெடுத்தாடி குசல் மெண்டிஸ/டன் 2ஆவது விக்கெட்டில் 73 ஓட்டங்களைப் பகிர்ந்தார். அவர் 12 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தார்.

மறுபக்கத்தில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய குசல் மெண்டிஸ் 51 பந்துகளில் 9 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸர் உட்பட 66 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார். சதீர சமரவிக்ரம 14 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காதிருந்தார்.

இந்தப் போட்டியில் வனிந்து ஹசரங்க விளையாடியதால் தசூன் ஷானக்க நீக்கப்பட்டார். (ஐ)

# சகல துறையிலும் ஜொலித்த துபே! ஆப்கானை வீழ்த்தியது இந்தியா!!

மொகாலி, ஜன. 13

ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான முதல் இருபது - 20 கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது. இந்தப் போட்டியில் ஷிவம் துபே துடுப்பாட்டம், பந்துவீச்சு என இரண்டிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

3 இருபது - 20 கிரிக்கெட் போட்டி கொண்ட தொடரில் விளையாடுவதற்காக ஆப்கானிஸ்தான் அணி, இந்தியா சென்றுள்ளது. இரு அணிகள் இடையே குறுகிய வடிவிலான இரு தரப்பு தொடர் நடைபெறுவது இதுவே முதன்முறையாகும். இந்த தொடரின் முதல் ஆட்டம் நேற்று மொகாலியில் நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் பந்துவீச்சை தெரிவு செய்தது.

ஆப்கானிஸ்தான் அணிக்காக குர்பாஸ் மற்றும் ஸத்ரான் தொடக்க வீரர்களாகக் களம் கண்டனர். இருவரும் 50 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். குர்பாஸ் 23 ஓட்டங்களிலும், ஸத்ரான் 25 ஓட்டங்களிலும் வெளியேறினர். இருவரும் அடுத்தடுத்து சில பந்துகள் இடைவெளியில் ஆட்டமிழந்தனர். தொடர்ந்து ரஹமத் 3 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

பின்னர் அஸ்மதுல்லா மற்றும் முகமது நபி இணைந்து 68 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். இருந்தும் ஒரே ஓவரில் இருவரும் ஆட்டமிழந்தனர். அஸ்மதுல்லா 29 ஓட்டங்கள், நபி 42 ஓட்டங்கள் எடுத்திருந்தனர். 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 158 ஓட்டங்கள் எடுத்தது ஆப்கன் அணி. 159 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை இந்தியா விரட்டியது. அணித்தலைவர் ரோஹித் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

கில், 12 பந்துகளில் 23 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். திலக் வர்மா, ஜிதேஷ் சர்மா மற்றும் ரிங்கு சிங் என அடுத்த துடுப்பாட்டம் செய்ய வந்த மூன்று பேருடனும் தலா 40இற்கு அதிகமான ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்திருந்தார் ஷிவம் துபே.

திலக் வர்மா 26, ஜிதேஷ் 31 மற்றும் ரிங்கு ஆட்டமிழக்காமல் 16 ஓட்டங்கள் எடுத்திருந்தனர். இறுதி வரை விளையாடிய துபே 40 பந்துகளில் 60 ஓட்டங்கள் எடுத்திருந்தார். 5 பௌண்ட்ரி, 2 சிக்ஸர்கள் இதில் அடங்கும். இருபது - 20 கிரிக்கெட்டில் அவரது 2ஆவது அரைச்சதம் இது. முதல் இன்னிங்ஸில் 2 ஓவர்கள் வீசி 9 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து ஒரு விக்கெட் கைப்பற்றியிருந்தார்.

17.3 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 159 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது இந்தியா. இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் இந்திய அணி 1-0 என முன்னிலை வகிக்கிறது. (ஐ)





# பாகிஸ்தானுடனான ரி-20 நியூஸிலாந்து அபார வெற்றி!

ஒக்லாந்து, ஜன. 13

பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் நியூஸிலாந்து அணி 46 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இரு அணிகளுக்கும் இடையில் நேற்று நடந்த ரி -20 போட்டியில் பாகிஸ்தான் அணியை ஷாகின் அப்ரிடி வழிநடத்தியிருந்தார். இந்தப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி டரில் மிற்செல், கேன் வில்லியம்சன் ஆகியோர் அரைச்சதம் அடித்து அசத்தினர்.

தொடக்கம் கொடுத்த பின் அலன் 34, வில்லியம்சன் 57, டரில் மிற்செல் 61 ஓட்டங்களை குவித்தனர். பின்னர் வந்தவர்களின் கிளன் பிலிப்ஸ் 19, மார்க் சாப்மன் 26 ஓட்டங்களைப் பெற்றனர்.

20 ஓவர்களில் நியூஸிலாந்து அணி 8 விக்கெட்கள் இழப்புக்கு 226 ஓட்டங்களைப் பெற்றது.

பாகிஸ்தானின் பந்துவீச்சில் ஷா அப்ரிடி, அப்பாஸ் அப்ரிடி தலா 3 விக்கெட்களையும் ஹரிஸ் ரவூப் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

227 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு நியூஸிலாந்து அணி கடும் நெருக்கடி கொடுத்தது. ரிம் சௌதியின் பந்துவீச்சில் பாகிஸ்தான் வீரர்கள் விக்கெட்களை பறிகொடுத்தனர்.

தொடக்கம் கொடுத்த சய்ம் அயூப் 27, மொஹமட் ரிஸ்வான் 25 ஓட்டங்களை எடுத்தனர். அடுத்து வந்த பாபர் அஸாம் 57 ஓட்டங்களை 6 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் பெற்றார்.

பின்னர் வந்தவர்களினல் இப்திஹார் அஹமட் பெற்ற 24 ஓட்டங்களே அதிகபட்சமாக அமைந்தது.

18 ஓவர்கள் நிறைவில் பாகிஸ்தான் அணி 180 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

நியூஸிலாந்தின் பந்துவீச்சில் ரிம் சௌதி 4, அடம் மில்ன், பென் சீர்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (ஐ)

# இந்தியா - மாலைதீவு நடுவே மூக்கை நுழைக்கும் இஸ்ரேல்!

## லட்சத்தீவில் என்ன செய்யப் போகிறது?

இந்திய பிரதமர் நரேந்திர மோடி குறித்து மாலத்தீவு அமைச்சர் ஒருவர் தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்துக்குப் பிறகு, இரு நாடுகளுக்கும் இடையே பதற்றம் நிலவுகிறது.

மாலத்தீவு அமைச்சர் மரியம் ஷியுனா, பிரதமர் மோதி லட்சத்தீவுக்குச் சென்று வந்த பிறகு பகிர்ந்த படங்கள் குறித்து ஆட்சேபகரமான கருத்துகளைத் தெரிவித்திருந்தார். அவர் பிரதமர் மோடியை இஸ்ரேலின் கைப்பாவை என்று அழைத்திருந்தார்.

மாலத்தீவுக்கு இஸ்ரேலுடன் ராஜதந்திர உறவுகள் இல்லை. மாலத்தீவு சுதந்திரம் அடைந்த பிறகு, 1965 முதல் 1974 வரை இரு நாடுகளுக்கும் இடையே ராஜதந்திர உறவு இருந்தது, ஆனால் 1974 இல் அது நிறுத்தப்பட்டது.



இரு நாடுகளுக்கும் இடையே இன்றும் முழுமையான ராஜதந்திர உறவு இல்லாவிட்டாலும், மாலத்தீவுக்கு வரும் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கணிசமானது.

இஸ்ரேல்-காஸா போர் தொடங்கிய பிறகு, பாலத்தீனர்களுக்கு ஆதரவாக மாலத்தீவில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. சிலர், இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளை மாலத்தீவுக்கு வர விடாமல் தடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.



### இந்தியா - மாலத்தீவு நடுவே மூக்கை நுழைக்கும் இஸ்ரேல்

இஸ்ரேலிய தூதரகம் தனது ட்விட்டர் பக்கத்தில் லட்சத்தீவின் அழகிய படங்களைப் பகிர்ந்தது. அப்போது தான், இந்தியா- மாலத்தீவு விவகாரத்தில் இஸ்ரேல் நுழைந்தது.

கடந்த திங்கள்கிழமை லட்சத்தீவின் சில படங்களைப் பகிர்ந்து கொண்ட இஸ்ரேலிய தூதரகம், அவர்களின் குழுக்களில் ஒன்று அங்கு சென்றதாகக் கூறியிருந்தது.

இஸ்ரேலிய தூதரகம், "கடந்த ஆண்டு கடல்நீரை குடிநீராக மாற்றும் திட்டம் குறித்து, இந்திய அரசின் கோரிக்கையின் பேரில் நாங்கள் லட்சத்தீவுக்குச் சென்றோம்" என்று கூறியது.

மேலும், "இஸ்ரேல் இந்த திட்டத்தில் பணியாற்றுவதற்கு தயாராக உள்ளது. லட்சத்தீவின் அழகை இன்னும் பார்க்காதவர்களுக்காக இந்தப் படங்கள்" என்று அந்த ட்வீட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது.

பிரதமர் மோடி குறித்து மாலத்தீவு அமைச்சர் கருத்து தெரிவித்ததைத் தொடர்ந்து, லட்சத்தீவின் படங்கள் சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பரவின.

பல பிரபலங்கள், மாலத்தீவுக்குச் செல்லாமல் உள்நாட்டிலேயே லட்சத்தீவின் அழகை கண்டு ரசிக்க வேண்டும் என்று கூற தொடங்கினர்.

இந்தியாவுடனான மோதல் காரணமாக, சுற்றுலாத் துறை பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாகவும் மாலத்தீவு கவலை கொள்கிறது.

எனினும், லட்சத்தீவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மிகக் குறைவுதான். எளிதான பயணம் மேற்கொள்ள போக்குவரத்து ஏற்பாடுகள் இல்லாதது மற்றும் போதிய உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாதது ஆகியவையே இதற்கு முக்கியக் காரணங்கள் ஆகும்.

இதனை சீர் செய்யும் நோக்கில், இந்திய அரசு பல நடவடிக்கைகளை எடுக்க உள்ளது. லட்சத்தீவில் புதிய விமான நிலையம் கட்டமைக்க தயாரிப்புகள் நடப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இஸ்ரேலிய தூதரகத்தின் ட்வீட்டைத் தொடர்ந்து, லட்சத்தீவில் உள் கட்டமைப்பு வசதிகள் குறித்த விவாதம் தொடங்கியுள்ளது.

### லட்சத்தீவில் இஸ்ரேல் என்ன செய்யப் போகிறது?

இஸ்ரேலிய தூதரகம் லட்சத்தீவில் கடல்நீரை குடிநீராக மாற்றும் திட்டத்தைத் தொடங்க உள்ளதாக ட்வீட் செய்திருந்தது. கடல்நீரை குடிநீராக மாற்றும் திட்டம் என்பது, உப்புநீரில் இருந்து உப்பு மற்றும் கனிமங்களை நீக்கி, அந்த நீரை குடிப்பதற்கும் வேறு தேவைகளுக்கும் பயன்படுத்த தயார்படுத்தும் ஒரு செயல்முறை.

உலகெங்கிலும் சுத்தமான நீருக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. ஐக்கிய நாடுகள் தரவுகளின்படி, உலகில் 200 கோடிக்கும் அதிகமான மக்கள் சுத்தமான குடிநீரை பெற



முடியாத நிலையில் உள்ளனர்.

கடல்நீரை நேரடியாகப் பயன்படுத்த முடியாது, ஏனென்றால் அதில் உப்புச் செறிவு 35,000 பிபிஎம் (ஒரு மில்லியனில் இருக்கும் துகள்கள்) இருக்கும். கடல்நீரை குடிநீராக மாற்றும் செயல்முறையின் மூலம் இந்த அளவை 10 பிபிஎம் வரை குறைக்க முடியும். இந்த நீர் குடிப்பதற்கு பாதுகாப்பானது.

ஒரு மதிப்பீட்டின்படி, உலகளவில் கிடைக்கும் குடிநீரில், ஒரு சதவீதம் மட்டுமே கடல்நீரை குடிநீராக மாற்றும் செயல்முறையின் மூலம் கிடைக்கிறது.

லட்சத்தீவு சிறிய தீவுகளின் தொகுப்பு ஆகும். அங்கு சுத்தமான நீர் தட்டுப்பாடு ஒரு பொதுவான பிரச்சனையாக உள்ளது. உப்புநீரை குடிப்பதற்கு ஏற்ற நீராக்குவதற்கான தொழில்நுட்பத்தில் இஸ்ரேல் நிபுணத்துவம் பெற்றது.

### இஸ்ரேலின் நீர் மேலாண்மை திட்டங்கள்

இஸ்ரேல் கடல்நீரை குடிநீராக மாற்றும் செயல்முறையை ஐந்து தசாப்தங்களாக பயன்படுத்தி வருகிறது. அதன் கடற்கரையில் பல்வேறு இடங்களில் ஐந்து கடல்நீரை குடிநீராக மாற்றும் ஆலைகள் உள்ளன. மேலும், இரண்டு கூடுதல் ஆலைகளை அமைப்பதற்கு தயாராகி வருகிறது.

2019 வரை, இஸ்ரேல் தனது நீர் தேவைகளில் 70 சதவீதத்தை இந்த கடல்நீரை குடிநீராக மாற்றும் செயல்முறையின் மூலம் பூர்த்தி செய்தது. அதன் குடிநீரில் 25 சதவீதம் இந்த செயல்முறையிலிருந்து வருகிறது.

கடல்நீரை குடிநீராக மாற்றுவதைத் தவிர, கழிவுநீர் சுத்திகரிப்பிலும் இஸ்ரேல் வெற்றி பெற்றுள்ளது. அதன் கழிவுநீர் மறுசுழற்சி விகிதம் 90 சதவீதத்தை எட்டியுள்ளது. இந்த நீரை விவசாயம் மற்றும் பிற தினசரி தேவைகளுக்குப் பயன்படுத்துகிறது இஸ்ரேல்.

ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறையின் தரவுகளின்படி, உலகின் கழிவுநீர் 80 சதவீதம் சுத்திகரிக்கப்படாமல் அல்லது பயன்படுத்தப்படாமல் ஆற்றிலோ கடலிலோ திரும்பவிடப்படுகிறது.

ஒவ்வொரு சொட்டு நீரையும் பயன்படுத்தி நீர் மேலாண்மை மற்றும் சுத்திகரிப்பு தொழில்நுட்பத்திற்கு உதாரணமாக இஸ்ரேல் தன்னை முன்னிறுத்துகிறது. தனது மேலாண்மை மற்றும் தொழில்நுட்பத்தின் மூலம் நீர் தட்டுப்பாடு பிரச்னைக்கு தீர்வு காண முடியும் என்று இஸ்ரேல் கூறுகிறது.

### கடல்நீரை குடிநீராக்குவதில் உள்ள சவால்கள் என்ன?

எந்தவொரு குறிப்பிட்ட தொழில்நுட்பமும் அதற்குரிய குறைபாடுகளைக் கொண்டிருக்கும். கடல்நீரை குடிநீராக மாற்றும் செயல்முறை அதற்கு விதிவிலக்கல்ல.

மாசசூசெட்ஸ் தொழில்நுட்பக் கழகத்தின் அறிக்கை



யின்படி, உலகளவில் நாள்தோறும் 100 பில்லியன் லிட்டர் நீர் கடல்நீரை குடிநீராக மாற்றும் செயல்முறையின் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது.

ஆனால் அதே அளவு உப்பு மீண்டும் கடலில் திரும்ப விடப்படுகிறது. இது சுற்றுச்சூழலுக்கு உகந்தது அல்ல. இதை கடலில் விடாமல் தவிர்ப்பதற்கான செயல்முறைகளை மேற்கொள்ள பலரும் அறிவுறுத்துகின்றனர்.

டவுன் டு எர்த் சுற்றுச்சூழல் இதழின் படி, கடல்நீரை குடிநீராக மாற்றும் செயல்முறையின் மற்றொரு சவால், அதை அமல்படுத்த அதிக செலவாகும். கடல்நீரை குடிநீராக மாற்றும் ஆலையை கட்டுவதற்கு லட்சக்கணக்கான



டாலர்கள் செலவாகலாம்.

நீர் தொழில்நுட்ப நிபுணர் கிறிஸ்டோபர் காசன் இந்த இதழிடம், இஸ்ரேல் வெற்றிபெற்றதற்குக் காரணம் அவர்களிடம் பணம் இருந்தது. குறைந்த கூலிக்கு தொழிலாளர்கள் இருந்தனர். இதனால் அவர்களின் செலவு குறைந்தது. இது உலகின் மற்ற பகுதிகளுக்குப் பொருந்தமாக இருக்காது என்று கூறுகிறார்.

அதே நேரத்தில், ஆய்வாளர்கள் மின்சார பயன்பாட்டையும் மற்றொரு பெரிய சவாலாகக் கருதுகின்றனர். கடல் நீரை குடிநீராக்கும் செயல்முறையில் அதிக மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது, இஸ்ரேல் தனது மொத்த மின்சாரத்தில் 10 சதவீதத்தை இந்த செயல்முறையில் செலவிடுகிறது.

இதற்கான தீர்வையும் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். புதுப்பிக்கத்தக்க ஆற்றல் இதில் முக்கிய பங்கு வகிக்க முடியும் என்று அவர்கள் நம்புகின்றனர். ஒரு ஆய்வின்படி, 2050-ம் ஆண்டிற்குள் சூரிய சக்தி மற்றும் சேமிப்பு முறை மூலம் கடல்நீரை குடிநீராக மாற்றும் செலவை குறைக்க முடியும் என்று நம்புகின்றனர்.

(16ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு



# அயோத்தி ராமர் கோயில் ஆன்மிகமல்ல; அரசியல் மட்டுமே!

ராஜன் குறை






அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் பிரம்மாண்டமான ராமர் கோயில் ஒன்று கட்டப்பட்டு, முடிந்தும் முடியாத நிலையில் இந்த மாதம் திறந்து வைக்கப்படப் போகிறது. இந்தக் கோயில் திறப்பு விழாவில் பங்கேற்க பல்வேறு துறைகளைச் சார்ந்த முக்கிய பிரமுகர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜனவரி 22ஆம் தேதி நாலரை அடி உயரமுள்ள குழந்தை ராமர் சிலை “பிராண பிரதிஷ்டை” செய்து நிறுவப்படப் போகிறது.

இந்த நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி, உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்ய நாத், ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் ஆகியோர் பங்கேற்பார்கள் என்று உறுதியாகத் தெரிகிறது. தெய்வச் சிலையை நிறுவுவதிலோ, கோயில் குடமுழுக்கு போன்ற மதம் சார்ந்த சடங்குகளிலோ முக்கியமான இந்து மத துறவிகளோ, ஆச்சாரியார்களோ முன்னிறுத்தப்படுவதாகத் தெரியவில்லை. அதாவது எந்த ஒரு குறிப்பிட்ட இந்து மதப்பிரிவின் சம்பிரதாயங்களின்படி இந்தக் கோயில் கும்பாபிஷேக சடங்குகள் நடக்கின்றன என்பது தெளிவாக இல்லை.

பாபர் மசூதி 1992ஆம் ஆண்டு இடிக்கப்பட்ட பின் அந்த இடம் யாருக்கு சொந்தம் என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் அதிசயமான ஒரு தீர்ப்பை வழங்கியது. அது குழந்தை ராமருக்கு சொந்தம் என்று ஒரு சாராரின் நம்பிக்கைகளின் அடிப்படையில் தீர்ப்பை வழங்கி, அதுவரை அந்த நிலத்தின் உரிமையாளர்களாக இருந்த இடிக்கப்பட்ட பாபர் மசூதி நிர்வாகத்தினரிடமிருந்து கையகப்படுத்தி மத்திய அரசிடம் அளித்தது. அங்கே ராமர் கோயில் கட்ட ஒரு டிரஸ்ட்டை உருவாக்கி, அங்கே கோயில் கட்ட வகை செய்யுமாறு ஒன்றிய அரசுக்கு உத்தரவிட்டது.

இது டைட்டில் டீட் எனப்படும் நிலம் யாருடைய சொத்து என்ற வழக்கில் வழங்கப்பட்ட விநோதமான தீர்ப்பு எனலாம். நில உடைமை சார்ந்த ஆதாரங்களைக் கணக்கில் கொள்ளாமல், ஒரு சாராரின் நம்பிக்கை என்பதற்கு அதிக மதிப்பளித்து, பிரச்னையைத் தீர்க்க வேறு வழியில்லை என்று அளிக்கப்பட்ட தீர்ப்பு இது.

அதன்படி சிறி ராமஜென்ம பூமி தீர்த் ஷேத்ரா என்ற பெயரில் ஒரு டிரஸ்ட் 2020ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. முதலில் ராமருக்காக வழக்காடிய உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் கே.பராசரன் அதன் இடைக்காலத் தலைவராக்கப்பட்டார். பின்னர் அயோத்தியிலுள்ள வேறொரு ராமர் கோயில் மஹந்த் நிருத்ய கோபால் தாஸ் அதன் தலைவராக்கப்பட்டார். அந்த டிரஸ்ட் இப்போது கோயிலை ஓரளவு கட்டிமுடித்து ஜனவரி 22ஆம் தேதி அங்கே ராமரை பிரதிஷ்டை செய்யப் போகிறது. அதற்கு ஏறக்குறைய 7,000 பிரமுகர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. பொதுமக்களில் பக்தர்கள் யாரும் நிகழ்ச்சியன்று அங்கே வர வேண்டாம் என்று கூறப்பட்டுள்ளது.

**பூரி சங்கராச்சாரியாரின் எதிர்ப்பு!**

ராமர் கோயில் கும்பாபிஷேகம் சாத்திரங்களின்படி நடக்கவில்லை என்பதற்கான முதல் கண்டனம் பூரி சங்கராச்சாரியாரிடமிருந்து எழுந்துள்ளது. அவர் அந்த நிகழ்வுக்குச் செல்லப் போவதில்லை என்று அறிவித்துள்ளார். நரேந்திர மோடி மதச்சார்பற்றவராக இல்லாமல், துணிந்து கோயில் திறப்பு விழாவை நடத்துவதை பாராட்டும் அவர், அதே சமயம் பிரதமரே ராமர் விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்தால் நான் அதைப் பார்த்து கைதட்ட வேண்டுமா என்றும் கேட்டுள்ளார்.

அவரைப் போன்று ஆச்சாரியார்கள் பலரும் வரும் காலங்களில் எதிர்ப்பைக் கூறலாம் அல்லது அவரும் கூட சமாதானப்படுத்தப்படலாம். ஆனால், அவருடைய எதிர்ப்பிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது. அவரைப்போன்ற ஆச்சாரியார்களிடம் சடங்குகளை எப்படிச் செய்வது, யார் செய்வது என்பது போன்ற அம்சங்கள் கலந்தாலோசிக்கப்படவில்லை.

இந்து கோயில்களில் தெய்வத்தை பிரதிஷ்டை செய்வது என்பது மிக முக்கியமான சடங்காகும். அனைவராலும் மதிக்கப்படும் பாரம்பரியமிக்க மடாதிபதி ஒருவரே அதைச் செய்யும் தகுதி படைத்தவர் என்பதுடன் எந்த மதப்பிரிவின் சடங்குகள் பின்பற்றப்படப் போகின்றன என்பதிலும் தெளிவு இருக்க வேண்டும்.

ஆனால் எதிர்வரும் நிகழ்வில் இது போன்ற அம்சங்களில் தெளிவில்லை. பாஜக, ஆர்.எஸ்.எஸ் தலைவர்கள் முக்கிய பங்கெடுக்கும் அரசியல் நிகழ்ச்சியாக உள்ளதே தவிர, ஒரு சனாதன மதம் சார்ந்த நிகழ்வாக அது இல்லை. நாட்டின் பிரதமரே ஒரு கோயிலுக்கு குடமுழுக்கு செய்வித்தால் நாட்டின் மதச்சார்பின்மை என்னவாகும் என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் இது பாஜக, ஆர்.எஸ்.எஸ், விஸ்வ ஹிந்து பரிஷத் ஆகிய சங்க பரிவார் அமைப்புகளின் வெற்றி விழா கொண்டாட்டம் என்பது மட்டும் தெளிவாக இருக்கிறது.

எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் 1949ஆம் ஆண்டு டிசம்பர் 22 அன்று அவர்கள் சதி செய்து இரவோடு இரவாக மசூதி வளாகத்தினுள் கொண்டு போய் வைத்த ராமர் சிலை, அதையொட்டி செய்த பிரச்சாரங்கள், புரளிகள், மதக்கலவரங்கள், சட்டத்தை மீறி வரலாற்று சின்னமான பாபர் மசூதியை இடித்துத் தள்ளியது ஆகிய அனைத்துச் செயல்களும் இறுதியில் இந்தக் கோயில் திறப்பு விழாவில் பூர்த்தி அடைவதை கொண்டாடுகிறார்கள்.

**இந்தியா கூட்டணியின் தடுமாற்றம்!**

அப்பட்டமான இந்த அரசியல் நிகழ்ச்சியில் தெளிவாக பங்கு கொள்ள மறுத்திருப்பது சீதாராம் எச்சூரியும், சி.பி.ஐ (எம்) கட்சியும் மட்டும்தான். இது மிகவும் பாராட்டுக்குரியது. காங்கிரஸ் கட்சி முடிவெடுக்க முடியாமல் தடுமாறுகிறது. பீஹாரிலும், கர்நாடகாவிலும் இந்தியா கூட்டணி தலைவர்களுக்குள் தெளிவான கருத்தொப்புமை இல்லை. இவர்களது இத்தகைய பலவீனமே பாஜக இந்த அளவு வளர்வதற்குக் காரணம். கொள்கைப் பிடிப்பு இல்லாமல் அரசியல் செய்தால் மக்களின் நம்பிக்கையைப் பெற முடியாது.

பீஹாரில் லாலு யாதவ் கட்சியினர் ராமர் கோயில் திறப்பு விழாவைப் பாராட்டுவது பகுத்தறிவற்ற அடிமை மனோநிலை என்று விமர்சித்துள்ளது. ஆனால் நிதிஷ் தலைமையிலான கட்சியினர் ராமர் கோயிலை இழித்துப் பேசுவது சரியல்ல என்று கண்டிக்கின்றனர். கர்நாடகாவில் ஓர் அமைச்சர் ராமர் கோயில் திறப்பு புல்வாமா போல ஒரு ஸ்டண்ட் என்று சொன்னவுடன், முதலமைச்சர் சீதாராமையா அதை சரிகட்ட முயற்சி செய்கிறார்.

காங்கிரஸ் கட்சிக்கு இந்து மதம் என்றால் என்னவென்றே தெரியவில்லை. அதனால் எங்கே ராமர் கோயில் திறப்புக்குச் செல்லாவிட்டால் இந்துக்கள் ஓட்டளிக்க மாட்டார்களோ என்று பயப்படுகிறது. அயோத்தி ராமர் கோயில் திறப்பு ஓர் அரசியல் நிகழ்ச்சி ஆன்மிக நிகழ்ச்சியல்ல என்று அவர்களால் துணிச்சலாகச் சொல்ல முடிவதில்லை. கமல் நாத் போன்றவர்கள் நாங்கள்தான் பாபர் மசூதி வளாகத்தை வழிபாட்டுக்கு 1984ஆம் திறந்து விட்டோம் என்று பெருமை பேசும் அளவுக்கு அந்தக் கட்சியில் கருத்தியல் தெளிவின்மை கோலோச்சுகிறது.

எல்லா கட்சிகளுமே இந்து மத அடையாளவாதத்தைக் கண்டு அஞ்சுகின்றன. ராவண காவியம் படைத்த தமிழ் நாட்டில் கூட ராமர் கோயில் அரசியல் மயமாக்கப்பட்டு இந்துத்துவ கொண்டாட்டமாக நடைபெறுவதைக் கண்டிக்கத் தயக்கம் காட்டப்படுகிறது. பெரும்பான்மைவாதத்தைக் கண்டு அஞ்சக் கூடாது. தைரியமாக எதிர்த்து நின்றால்தான் அது பெரும்பான்மையே கிடையாது என்பது வெளிப்படும். பெரும்பான்மை என்பது ஓர் உளவியல் கட்டமைப்புதான் என்பதை உணர வேண்டும்.

**ஒரே நாடு, ஒரே கடவுள் என்பது சாத்தியமா?**

இந்து மதம் குறித்து பல்வேறு விமர்சனங்கள் இருந்தாலும் அது பல தெய்வ வழிபாடு கொண்டது என்பதை மறுக்கவே முடியாது. உதாரணமாக இந்துக்களின் புனித நூல் எதுவென்று கேட்டால் வேதங்கள் என்று சொல்வார்கள். வேதங்களில் ராமர் என்ற கடவுளே கிடையாது. வேதங்களில் சிவன், விஷ்ணு போன்ற தெய்வங்களே மிகவும் குறைவாகத்தான் உச்சரிக்கப்படுகிறார்கள்.

பிற்காலத்தில் முக்கியம் அற்றவர்களாகிப் போன இந்திரன், வருணன், அக்னி போன்ற தேவர்களே வேதங்களில் பாடப்படும் முக்கிய கடவுளர்கள். ராமர், கிருஷ்ணர் எல்லாம் சுத்தமாகக் கிடையாது. அவர்கள் வேத காலத்தில் தோன்றியிருக்கவேயில்லை.

அது மட்டுமல்ல. நாட்டில் 80 வீத மக்கள் அவரவர்கள் கிராமத்து தெய்வங்களைத்தான் வழிபடுகிறார்கள். இந்தியா முழுவதும் ஐயனார், கருப்பு போன்ற எண்ணற்ற கிராம தெய்வங்கள் உள்ளன. மக்கள் தங்கள் வாழ்வினை பராமரிப்பதாகக் கருதுவது இந்த தெய்வங்களையே. அது மட்டுமன்றி சக்தி, துர்கை, அம்மன் என்பது போன்ற பெண் தெய்வ வழிபாடே பெருவாரியான மக்களின் நம்பிக்கைக்கு ஆதாரமாக உள்ளது.

(16ம் பக்கம் பார்க்க)

# அயோத்தி ராமர் கோயில் ஆன்மிகமல்ல,...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் ஒவ்வொரு மாநிலத்திலும் பிரத்யேகமாக சில கடவுள்கள் முக்கியமாக மக்களின் சிந்தனையில் இடம்பெற்றிருப்பார்கள். தமிழ்நாட்டில் முருகன் என்ற கடவுள் போல, மும்பையில் கணபதி போல ஆங்காங்கே பல கடவுள்கள் செல்வாக்கு பெற்றிருப்பார்கள். ஐயப்பன், ஷீர்டி சாய்பாபா, சந்தோஷி மாதா என்று மிகுந்த வெகுமக்கள் ஈர்ப்புள்ள தெய்வங்கள் பல.

ராமர் என்ற கடவுள் பார்ப்பனர்கள் போன்ற உயர்ஜாதி மக்களின் கடவுளே தவிர, வெகுமக்களின் கடவுள் கிடையாது. அவர்களிலும் கூட பலர் அவர்களுடைய தனிப்பட்ட இஷ்ட தெய்வங்களைத்தான் கும்பிடுவார்கள். ஒரு சிலர் ஹயக்ரீவர் என்ற தெய்வத்தை மட்டுமே கும்பிடுவார்கள்.

**கடவுள் பக்தியல்ல காரணம்!**

ராமரை முக்கிய கடவுளாக ஆர்.எஸ்.எஸ், பாஜக உருவாக்கக் காரணம் மத அடையாளவாதம்தானே தவிர பக்தியல்ல. சாவர்க்கர் ராமர்தான் இந்தியா முழுவதையும் வென்று ஒரே நாடாக அதை உருவாக்கினார் என்று எழுதியுள்ளார். அதாவது ராமர் இந்திய தேசத்தை ஒருங்கிணைத்த மன்னர் என்பது அவரது கணிப்பு. அப்படியெல்லாம் எதுவும் நடந்ததற்கு வரலாற்று ஆதாரங்கள் கிடையாது என்றாலும், ஓர் ஒற்றை இந்துத்துவ அடையாளத்தை கட்டமைக்க ராமர் அவசியமாகப்படுகிறார்.

பாஜகவுக்கோ, ஆர்.எஸ்.எஸ்ஸுக்கோ மக்கள் பக்தியுடன் ராமரை வழிபட வேண்டும் என்ற அவசியம் கிடையாது. அயோத்தியை ஒரு இந்துத்துவ அடையாளத்திற்கான நகரமாக மாற்ற வேண்டும் என்பதுதான் அவர்கள் விருப்பம். ராமரை வழிபடத்தான் பல கோயில்கள் நாட்டில் இருக்கின்றனவே. ஆனால், அவர்கள் நோக்கம் மசூதியை இடித்த இடத்திலேயே கோயிலை கட்டி காண்பிக்க வேண்டும் என்பதுதான்.

பிரதமர் நரேந்திர மோடியே 2013ஆம் ஆண்டு, பிரதமராவதற்கு முன், முதலில் கழிவறைகளைக் கட்ட வேண்டும், பிறகு கோயில் கட்ட வேண்டும் என்று கூறியவர்தான். அப்போது அவர் வளர்ச்சியை முன்னிறுத்தும் பிரதமர் வேட்பாளராக வடிவெடுத்து இருந்தார். இப்போது ராமர் கோயிலை திறந்து வைப்பவராக விளங்குகிறார்.

**இந்தியா கூட்டணி தலைவர்கள் செல்வதற்குக் கோயிலா இல்லை?**

தாங்கள் இந்து மத விரோதிகள் என்று மக்கள் நினைத்துவிடக் கூடாது என்று இந்தியா கூட்டணி தலைவர்கள் நினைத்தால் அவர்கள் செல்வதற்குக் கோயிலா இல்லை? நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான தெய்வங்களும், கோயில்களும் நிறைந்துள்ளனவே?

ராகுல் காந்தி சென்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது தன்னை சிவபக்தன் என்றுதானே கூறிக்கொண்டார்? அப்போது அவர் ஜனவரி 22 அன்று காசி விசுவநாதர் கோயிலுக்கோ, ராமேஸ்வரத்திற்கோ செல்லலாமே அல்லது அவர் வயநாடு தொகுதிக்கு அருகிலுள்ள குருவாயூரப்பன் கோயிலுக்குச் செல்லலாமே?

பூரி சங்கராச்சாரியாரே மத சம்பிரதாயங்கள்படி திறக்கப்படாத கோயிலுக்குச் செல்ல மாட்டேன் என்று சொல்லும் போது, இந்த பாஜக-ஆர்.எஸ்.எஸ் அரசியல் கோயிலுக்கு இந்தியா கூட்டணியினர் செல்லாவிட்டால்தான் என்ன? அதைப் புறக்கணித்தால்தான் என்ன? மதச்சார்பின்மையைக் கூட பேச வேண்டாம். இந்து மதம் ஒரு போதும் ஒற்றை கோயிலையோ, கடவுளையோ அடையாளமாகக் கொண்டதில்லையே? பிறகு ஏன் இவர்கள் அஞ்ச வேண்டும்?

பாஜக, ஆர்.எஸ்.எஸ் கட்டிய கோயிலுக்குப் போகாவிட்டால் ஒன்றும் ஆகிவிடாது என தைரியமாக இந்தியா கூட்டணி தலைவர்கள் அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழாவைப் புறக்கணிக்க வேண்டும். அதுவே எழுபத்தைந்து ஆண்டு இந்துத்துவ வேலைத் திட்டத்துக்கான கண்டனமாக இருக்கும். ●

# இந்தியா - மாலைதீவு நடுவே...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

கடல்நீரை குடிநீராக மாற்றும் செயல்முறையின் மூலம் கிடைக்கும் குடிநீரின் தரத்தைப் பற்றிய கவலைகளும் எழுந்துள்ளன. ஐக்கிய நாடுகள் அறிக்கையின் படி, இந்த செயல்முறையிலிருந்து கிடைக்கும் நீரில் அன்றாட உணவில் மிகவும் முக்கியமான மெக்னீசியம் குறைபாடு உள்ளது.

இதன் குறைபாடு இதய நோய்களின் அபாயத்தை அதிகரிக்கும் என்று ஐக்கிய நாடுகள் கூறுகிறது. மேலும், இஸ்ரேலில் இந்த நீரை பயன்படுத்தும் பகுதிகளில், இதய நோய்கள் பொதுவானவை.

கடல்நீரை குடிநீராக மாற்றும் செயல்முறை இந்தியாவில் நீண்ட காலமாக செயல்படுத்தப்பட்டு வருவது இல்லை. 2010 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டின் திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூரில் இந்தியாவின் முதல் கடல் நீரை குடிநீராக மாற்றும் ஆலை நிறுவப்பட்டது.

இன்று, தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் மற்றும் குஜராத் என இந்தியாவின் மூன்று மாநிலங்களில் நான்கு பெரிய ஆலைகள் உள்ளன. மேலும் கடல்நீரை குடிநீராக மாற்றும் ஆலை கட்டுவதாக மகாராஷ்ட்ரா அறிவித்துள்ளது.

குடிநீர் தட்டுப்பாடு இப்போது இந்தியாவின் பெரு நகரங்களில், குறிப்பாக கடற்கரை ஓரத்திலுள்ள நகரங்களில் வழக்கமான விஷயமாக மாறிவிட்டது. மீஞ்சூரில் கட்டப்பட்ட முதல் கடல்நீரை குடிநீராக மாற்றும் ஆலை சென்னையின் ஐந்து லட்சத்திற்கும் அதிகமான மக்களுக்கு சுத்தமான நீரை வழங்குகிறது.

மகாராஷ்ட்ரா அறிவித்த ஆலை மும்பைக்கு நீர் வழங்கும். நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய கடல்நீரை குடிநீராக மாற்றும் ஆலை குஜராத்தில் உள்ள ஜாம்நகரில் உள்ளது. குஜராத் எட்டு புதிய கடல்நீரை குடிநீராக மாற்றும் ஆலைகளை கட்ட திட்டமிட்டுள்ளது.

எனினும், லட்சத்தீவில் இஸ்ரேல் எந்த வகையான கடல்நீரை குடிநீராக மாற்றும் ஆலையை கட்டும் அல்லது அங்கு இந்திய அரசுக்கு எப்படி உதவும் என்பது குறித்து இதுவரை எந்த திட்டமும் வெளிப்படையாக தெரிவிக்கப்படவில்லை. ●

